மலர் - 26 / இதழ் -07/ஜுலை 2025
Volume -26/Issue - 07/ July 2025
தமிழ் மாத இதழ்/தனிப்பிரதி ரூ.20/-
Tamil Monthly/Per Copy Rs.20/-

# வளரும் விண்ணரசு
## VALARUM VINNARASU








**இரதங்களும் குதிரைகளுமல்ல...**
**கர்த்தரின் நாமமே.**

இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன்
ICGM

# பொதுச்சேவகரிடமிருந்து...



கிறிஸ்துவுக்குள் பிரியமான வளரும் விண்ணரசு வாசக சகோதர சகோதரிகளுக்கு, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துகள்.



திரிபுராவில் நடைபெற்ற அருட்பணியாளர் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள்

ஜூன் மாதம் நமது தேசத்தின் வடகிழக்கு எல்லைப் பகுதியிலுள்ள திரிபுரா மாநிலத்தில் ஊழியம் செய்யும் நமது ஊழியர்கள் மற்றும் வாலிபர்களுக்கான ஆறு நாட்கள் சிறப்புக்கூட்டங்கள் நடைபெற்றன.

இதில் கலந்து கொண்ட அநேகர் மணிப்பூர் மாநிலத்தை சேர்ந்தவர்கள். அனைவருக்கும் ஆங்கிலம் நன்றாகத் தெரிந்திருந்த காரணத்தினால், எனக்கு இந்தக் கூட்டங்கள் புதிய கற்றுக் கொள்ளும் அனுபவமாக அமைந்தது.

மணிப்பூர் நற்செய்தி லூத்தரன் சபையின் பேராயர் அவர்களும், சினாட் அமைப்பின் நிர்வாக இயக்குநர் ஆகியோரும் இந்தக்கூட்டங்களில் கலந்து கொண்டனர்.

நமது இயக்கத்துடன் பங்குதாரர்களாக இணைந்து அருட்பணியாற்ற விருப்பம் தெரிவித்துள்ளதால், அவர்களோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யவிருக்கிறோம்.

திரிபுரா தேவையுள்ள ஒரு மாநிலம். அறுப்பு மிகுதியாகவுள்ளது. ஆகவே, அறுவடைக்கு ஆட்களை அனுப்ப வேண்டுமே என்ற தரிசனம் எங்கள் கண் முன் நிற்கிறது.

ஜூன் இரண்டாவது வாரத்தில் தூத்துக்குடியிலுள்ள சி.எஸ்.ஐ. தூய திரித்துவ ஆங்கில திருச்சபையின் மூன்றுநாள் சிறப்புக்கூட்டங்களில் கலந்து கொண்டு, தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொள்ள தேவன் கிருபை செய்தார். இந்த நிகழ்வுகளை ஒருங்கிணைத்த தூத்துக்குடி நற்செய்தி குழுவின் உறுப்பினரும், நமது இயக்கத்தின் பல ஆண்டு நண்பருமான திரு. பிரபாகரன் அவர்களுக்கு மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மூன்றாம் வாரம் மதுரை திருப்பாலையிலுள்ள சி.எஸ்.ஐ தூய பேதுரு ஆலயத்தில் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்பளித்த குருவானவர் அருள்திரு. ஜெயக்குமார் மற்றும் செயலர் திரு. மதிவாணன் ஆகியோருக்கும் நன்றியைத்

தொடர்ச்சி கடைசிப் பக்கம் பார்க்க...

நிறுவனர்
டாக்டர். N.J. ஞானையா

ஆசிரியர் குழு:

அருள்திரு.G. பொன்னுராஜ்
அருள்திரு. இம்மானுவேல் பாண்டி
திரு. இரா. பாலசுப்பிரமணியன்
திரு.V.S. தம்பிராஜ்
திருமதி. ரேணுகா பிரின்ஸ்

இதழின் உள்ளே...

| | |
|---|---|
| அருட்செய்தி! | 04 |
| கனவு காண வா! | 07 |
| துதித்து மன்றாடுவோம்! | 10 |
| மறக்கமுடியாத அருட்தொண்டர்கள் | 20 |
| ஜுன் மாத வினா-விடைகள்... | 27 |
| வேதாகமத்தின் பக்கங்களிலே ... | 29 |
| சரியான விடை எழுதியவர்கள் | 32 |
| வேத வினாக்கள் | 33 |
| நடப்புச் செய்திகள் | 34 |

| | ஆண்டு சந்தா | ஆயுள் சந்தா |
|---|---|---|
| இந்தியா : | ₹200/- | ₹1500/- |

**சந்திக்கப்படாத மக்கள் கூட்டங்களை சந்தித்து சீடராக்கும் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்ப வேண்டிய முகவரி**

**ICGM**
**58/1 முத்தாலம்மன் கோயில் தெரு, சேலையூர், சென்னை- 600 073.**

வளரும் விண்ணரசு குறித்த விபரங்களுக்கு
தொடர்பு கொள்ள அலைபேசி : 9003916480
ICGM Land Line: (044)2229 1045
contacticgm@gmail.com

# இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன்

**தரிசனம்:** (Vision Statement)

நமது இந்திய நாட்டின் அனைத்து மாநிலங்களில் வாழும் ஒவ்வொரு மக்கள் கூட்டத்திலும் சாட்சியுள்ள சுயசார்புள்ள திருச்சபைகள்.

**வேத ஆதாரம்:** (வெளி. 7:9)

"இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக் குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன்."

**செயல்திட்டம்:** (Mission Statement)

இயேசு கிறிஸ்துவின் சீடர்களாகிய நாம், இந்தியாவில் நற்செய்தி சென்றடையாத, தேவன் வழிநடத்துகிற மக்கள் கூட்டங்களுக்கு, நற்செய்தியைப் பிரசங்கித்து, அவர்களை சீடர்களாக்கி, சாட்சியுள்ள சுயசார்பு திருச்சபைகளை உருவாக்குகின்ற நோக்கத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

**வேத ஆதாரம்:** (மத்தேயு 28:19-20)

"ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்."

வளரும் விண்ணரசு பத்திரிகைக்கு செக், டிராப்ட் ஆன்லைன் மூலம் பணம் அனுப்புபவர்கள் கீழ்க்கண்ட வங்கிக்கணக்குக்கு அனுப்பி 94 42 15 04 82 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி அனுப்பவும்.
A/C NAME: IRAI ARASU TRUST, BANK NAME: STATE BANK OF INDIA
A/C NUMBER: 10143136762, IFSC CODE: SBIN0002235

# "இரதங்களும் குதிரைகளுமல்ல ... கர்த்தரின் நாமமே"

அருட்செய்தி

(எது நமது உண்மையான நம்பிக்கை ?)
சங்கீதம் 20

டாக்டர். N.J. ஞானையா

நான் சோர்ந்து போகும் நேரங்களில் சங்கீதங்களை வாசித்து ஜெபிப்பேன். சில வேளைகளில் கீர்த்தனைப்பாடல்களைப் பாடியும் அந்தச் சோர்வைப் போக்குவேன். அதில் யோவான் பால்மர் பாடிய "**வாரா வினை வந்தாலும் சோராதே மனமே - வல்ல கிருஸ்துனக்கு நல்ல தாரகமே**" என்னும் பாடல் ஒன்றாகும்.

3000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தாவீது அவருடைய நம்பிக்கையை வெளிப்படுத்தும் அருமையான பாடல்களைப் பாடினார்.

அவற்றில் இதுவும் ஒன்று. தாவீதின் காலத்தில் அடிக்கடி போர்கள் நடந்தன. போருக்குப் போகும் முன்பு அவருடைய படைவீரர்களும், அவரும் ஆலயத்தின் முன் நின்று (ஆசரிப்புக் கூடாரத்தின் முன் நின்று) பாடும் பாடல் இது. அவர் காலத்திற்குப் பின்னர் ஒவ்வொரு நாளும் இஸ்ரவேல் மக்கள் பாடும் பாடலாக மாறிவிட்டது என்றும் கருதப்படுகிறது.

**பாதுகாப்பிற்கான வேண்டுதல் - ஜெபம்** (1-5)

முதல் ஐந்து வசனங்கள் ஒரு ஜெபமாகவே தோன்றுகின்றன. ஆபத்து நாளில் நாம் அதிகம் ஜெபிக்கிறோம். அதைக் கர்த்தர் கேட்கிறார்.

முதல் வசனத்தில் "யாக்கோபின் தேவனுடைய நாமம் உயர்ந்த அடைக்கலம்" என்று தொடங்குகிறது இந்தப் பாடல். கடவுளின் மக்கள் யாக்கோபு வம்சத்தார் என்றும் இஸ்ரவேல் புத்திரர் என்றும் அழைக்கப்பட்டனர் (யாத் 19:3). கடவுளின் பெயர் அவருடைய பண்பினையும் அவருடைய அதிகாரத்தையும் குறிக்கிறது.

"இயேசுவின் நாமம் இனிதான நாமம்
இணையில்லா நாமம் இன்ப நாமம்"
என்னும் பாடலில் இவற்றைக் காணலாம்.

இரண்டாம் வசனம் "தூய இடத்திலிருந்து உதவி வருவதாக. சீயோனிலிருந்து ஆசீர்வாதம் வருவதாக" என்று கூறுகிறது. ஆசரிப்புக் கூடாரம் இருந்த இடம் எருசலேமில் ஒரு பகுதியாக இருக்கும் சீயோன் மலையைக் குறிக்கிறது. தேவாதி தேவன் வாழுமிடம் தூய இடம்.

அவர் ஓரேப் மலையில் மோசேயைச் சந்தித்தபோது, "உன் காலணிகளைக் கழற்றிப் போடு; நீ நிற்கிற இடம் தூய பூமி" (யாத் 3:5) என்றார். ஆண்டவர் வாழும் இடம் எல்லாம் தூய இடமே. அங்கிருந்து நமக்கு ஆசீர்வாதம் வரும். பவுல் கொரிந்தியருக்கு எழுதிய கடிதத்தில் நமது சரீரத்தில் தூய ஆவியானவர் வாழுகிறார்.

எனவே அது கடவுள் வாழும் ஆலயமாயிருக்கிறது (1 கொரி 6:19) என்று குறிப்பிடுகிறார். நாம் எவ்வளவு தூய வாழ்வு வாழவேண்டும் என்னும் அறைகூவல் நமக்கு வருகிறது. எண்ணங்களிலும், பேச்சுக்களிலும், செயல்களிலும் தூய வாழ்வுக்காக ஜெபிப்போம். வாழ முயற்சிப்போம்.

மூன்றாம் வசனத்தில் காணிக்கைகள் - தகனபலிகள் பற்றிய குறிப்பு வருகிறது. இன்றும் நாம் ஆண்டவரை ஆராதிக்கச் செல்லுகையில் காணிக்கை செலுத்துகிறோம். அன்றைய தகனபலியை, இன்றைய மன்றாட்டுகளாக, ஜெபங்களாக ஏறெடுக்கிறோம். ஜெபத்தின் இன்றியமையாமையை இந்த வசனம் எடுத்துரைக்கிறது.

"எந்தச் சமயத்திலும் சகல விதமான வேண்டுதலோடும்,

விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்" (எபேசியர் 6:18) என்று எபேசு சபைக்கும், "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" (1 தெச 5:17) என்று தெசலோனிக்கே சபைக்கும் பவுல் எழுதும் வசனங்கள் நமக்கும் மிகவும் தேவையே!

நமது மனவிருப்பத்தை - நமது ஆலோசனைகளை ஆண்டவர் நிறைவேற்றுவாராக என்று நான்காம் வசனம் கூறுகிறது. ஐந்தாம் வசனத்தில் நமது வேண்டுதல்களையெல்லாம் கர்த்தர் நிறைவேற்றுவாராக என்று வருகிறது. "**When we work, we work; When we pray God works**" என்று பெயர்பெற்ற அருட்பணியாளர் ஹட்சன் டெய்லர் கூறுவாராம்.

பவுல், "நாம் வேண்டிக் கொள்ளுவதற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே நமக்குச் செய்யவல்லவர்" (எபேசியர் 3:20) அந்த ஆண்டவர் என்று எழுதுகிறார்.

நாம் ஜெபிக்கும் ஜெபங்கள் அவருடைய சித்தத்திற்கு இசைவாய் இருக்கும்போதே இவைகள் நடக்கும். இயேசுவே "பிதாவே உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்" (லூக்கா 22:42) என்று ஜெபித்தார். ஆனால் கடவுளின் சித்தம் அவர் அந்தப் பாத்திரத்தை - சிலுவையை - ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதே!

"நாங்கள் உமது மீட்பினால் (இரட்சிப்பினால்) மகிழ்ந்து, எங்கள் தேவனுடைய நாமத்திலே வெற்றிக்கொடியேற்றுவோம்" (வசனம் 5) என்ற வசனம் மிகுந்த நம்பிக்கையுள்ள தாவீதை நமக்குக் காட்டுகிறது. புதிய ஏற்பாட்டில் வரும் மீட்பு நமது ஆவிக்குரிய மீட்பு - அது சிலுவையினால் வந்தது. பாவத்தின் தண்டனையிலிருந்தும், தாக்குதல்களிலிருந்தும் நம்மைப் பாதுகாக்கிறது.

ஆனால், பழைய ஏற்பாட்டில் தாவீது எழுதுகிற மீட்பு, அவருடைய எதிரிகளிடமிருந்து - இஸ்ரவேலைச் சுற்றி வாழ்ந்த கானானிய மக்களாகிய பெலிஸ்தியர், அமெலேக்கியர், மோவாபியர் போன்ற மக்களிடம் இருந்து காப்பாற்றப்பட்ட சூழ்நிலை.

வெற்றிபெறும் அரசர்கள் தங்கள் புகழை நிறுவக் கொடியேற்றுகிறார்கள். விடுதலைப் பயண வரலாற்றில் இஸ்ரவேல் மக்கள் அமெலேக்கியரை முறியடித்தபின், மோசே கடவுளை "யெகோவா நிசி" (யாத்திராகமம் 17:15) என்று அழைக்கிறார். அதற்கு "ஆண்டவர் என் கொடி" என்று பொருளாம்.

**விசுவாச அறிக்கை** (வசனம் 6)

தாவீது பாடப்பாட, அவருடைய விசுவாசம் வளரும். பயம் மறையும். இந்த வசனத்தில், "கர்த்தர் தாம் அபிஷேகம் பண்ணினவரை இரட்சிக்கிறார் என்று அறிந்திருக்கிறேன். அவருடைய வலது கரம் ஆற்றலுள்ளது. அவர் ஜெபங்களைக் கேட்கிறவர்" என்று எழுதுகிறார். போராட்டம் மிகுந்த இந்த வாழ்வில் அடிக்கடி நாம் நம்முடைய விசுவாசத்தை அறிக்கை செய்யவேண்டும். பல சபைகளில் இதை விசுவாசப் பிரமாணமாகச் சொல்லுகிறார்கள்.

சாமுவேல் என்னும் தீர்க்கத்தரிசி தாவீதை அவருடைய சகோதரர்கள் நடுவிலே தைலக்குப்பியை எடுத்து அவர் தலையில் எண்ணெய் வார்த்து அபிஷேகம் பண்ணினார்.(1 சாமு 16:13). அப்போது ஆவியானவர் தாவீதின்மேல் வந்து இறங்கியிருந்தார். இயேசுவை நாம் ஏற்றுக்கொள்ளும்போது ஆவியானவர்

நமக்குள்ளே வருகிறார். ஒருவகையில் கிருஸ்துவின் அடியவர்களாகிய நாம் எல்லாரும் அபிஷேகம் பெற்றவர்களே.

கடவுள் நம் ஜெபங்களைக் கேட்டு நமக்கு வெற்றிதரும் வாழ்வைத் தருகிறார். இதுதான் நமது நம்பிக்கை. எபேசியர் 1:19-23 வரை வாசியுங்கள். அதில் பவுல் எழுதும் பிரகாசமுள்ள மனக்கண்கள் நமக்குக் கிடைக்கும்போது, அந்த வசனங்களில் ஒலிக்கும் விசுவாசமும், வெற்றியும் நம் சொந்தமாகும்.

**இரதங்களும், குதிரைகளும் அல்ல ! அவர் திருப்பெயரே** (வசனங்கள் 7-8)

**எது நமது நம்பிக்கை?**

அந்த நாட்களின் இராணுவபலம் இரதப்படைகளிலும், குதிரைப் படைகளிலும் இருந்தது. இஸ்ரவேல் மக்கள் விடுதலை பெற்று எகிப்தைவிட்டு வெளியேறிய பின்னரும் பார்வோனும் அவன் ஊழியக்காரரும் அவர்களைப் பின் தொடர்ந்தார்கள். 600 இரதங்களும், மற்ற எல்லா இரதங்களும் சென்றன. எல்லாக் குதிரைவீரர்களும் சென்றனர். (யாத் 14:6-9).

ஆனால், இறுதி வெற்றி கடவுள் மக்களுக்குத்தான். அவர்களிடம் இரதங்களும் இல்லை - குதிரைகளும் இல்லை! தாவீது சிறுவயது முதல் இவற்றைப் படித்தவர் - அது மட்டுமல்ல, அவருடைய வாழ்விலும் பார்த்தவர். ஆகவே, மிகச்சிறப்பான இந்த வசனங்களை எழுதுகிறார்:

சிலர் இரதங்களைக் குறித்தும், சிலர் குதிரைகளைக்குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள். நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக் குறித்தே மேன்மை பாராட்டுவோம். அவர்கள் முறிந்து விழுந்தார்கள்; நாங்களோ எழுந்து நிமிர்ந்து நிற்கிறோம்.

"அவர்களும் - நாங்களும்" என்ற ஒப்பிடுதல் தாவீதின் பாடல்களில் அடிக்கடி ஒலிக்கும் வரியாகும். உலகம் ஒருபுறம் - கடவுளின் மக்கள் மறுபுறம். இயேசுவும் இப்படி ஒப்பிடும் குறிப்புக்களை அடிக்கடி பயன்படுத்தினார் (நல்ல மரம் - கெட்டமரம்; புத்தியுள்ள கன்னிகைகள் - புத்தியற்றவர்கள்; செம்மறி ஆடுகள் - வெள்ளாடுகள்; விரிவான வழியில் செல்லுகிறவர்கள் - இடுக்கமான வாசல் வழி செல்லுகிறவர்கள்; கற்பாறையில் வீடு கட்டிய அறிவாளிகள் - மணலில் கட்டிய முட்டாள்கள்).

இன்றைய உலகிலும் தங்கள் பணம், புகழ், பதவி, அதிகாரம் இவற்றை மேன்மைபாராட்டி அவற்றை நம்பும் மக்கள் உண்டு (கிருஸ்தவர்களிலும் உண்டு!) ஆனால் கடவுளை - அவருடைய திருப்பெயரை மட்டும் நம்பும் - மேன்மை பாராட்டும் ஒரு சிறு கூட்டமும் உண்டு. நாம் எதை நம்பி மேன்மை பாராட்டுகிறோம்?

**முடிவான ஜெபம்** (வசனம் 9)

மனுநீதிச் சோழனின் வாசலில் இருந்த (ஆராய்ச்சி மணி என்றழைக்கப்பட்ட) மணியை ஒரு பசு அடித்ததாம். அதனுடைய கன்றை அரசனின் மகன் தெரியாமல் தேர்ச் சக்கரத்தில் ஏற்றிக் கொன்றுவிட்டானாம். அந்த மணிச்சத்தம் கேட்ட மன்னன், பசுவிற்கு நீதி வழங்க தன் மகனையே தேர்ச்சக்கரத்தில் ஏற்றிக் கொன்றானாம். இது ஒரு பழங்கதை. அது கற்றுத் தரும் பாடம் "யார் கூப்பிட்டாலும் அரசர் செவி கொடுப்பார்".

இந்த வசனத்தில் (வசனம் 9) வரும் அரசர்தான் கடவுள். தாவீது இஸ்ரவேலருக்கு அரசர். ஆனால் கடவுளோ உலகெங்குமுள்ள மக்கள் யாவருக்கும் அரசர்.

**அவர் நம்மை மீட்பவர் மட்டுமன்றி நம்முடைய ஜெபங்களைக் கேட்பவர் - பதில் தருபவர். நீதி வழங்குபவர். அவரை நாம் கூப்பிடுவோமா?**

***

தன்வரலாற்றுத் தொடர்

# "வெளிப்படுத்தும் நேரம்!" 08

# "நான் யோசேப்பு"

(பழைய ஏற்பாட்டு யோசேப்பின் வாழ்க்கை வரலாறு)

கனவு காண வா!

அறிவு



மனிதன் எதை விதைக்கிறானோ! அதையே அறுப்பான்!

தினைவிதைத்தவன் தினை அறுப்பான்! – வினை விதைத்தவன் வினை அறுப்பான்!

இவையெல்லாம் பழமொழிகள். வாழ்க்கையில் நடப்பவை பழமொழிகளாக மாறிவிடுகின்றன.

என் அண்ணன் யூதாவின் கதறல், அங்கேயிருந்த மற்ற சகோதரர்களின் உள்ளங்களையும் உடைத்தது. அவர்கள் எல்லாரும் அழுதார்கள்.

"இளையவனான பென்யமீனை விட்டுவிட்டு எப்படி நான் என் தகப்பனிடம் போவேன்? போனால், என் தகப்பனுக்கு நேரிடும் தீங்கை நான் எப்படிக்காண்பேன்" என்ற யூதாவின் கண்ணீர்க்குரல் என்னையும் பாதித்தது. என்னாலும் என்னை அடக்க முடியவில்லை.

என்னை வெளிப்படுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது.

(நான் நடத்திய நாடகமும் முடிந்துவிட்டது!)

ஒருவகையில் இந்த நாடகத்தின் விளைவு, என் சகோதரர் தங்கள் குற்றங்களை உணரத் துணைசெய்தது என்றும் கூறலாம். "உமது அடியாரின் அக்கிரமத்தை தேவன் விளங்கப் பண்ணினார்" (ஆதி 44:16) என்ற யூதாவின் "பாவ அறிக்கை" இதை உறுதி செய்தது.

நான் செய்யாத குற்றத்திற்காக என்னை அடிமையாக விற்றார்கள். என்மீது கொண்ட கோபம், பொறாமை காரணமாக அப்படிச் செய்தார்கள். இப்போது அதை உணருகிறார்கள். தேவன் அதை உணரச் செய்கிறார். என்னுடைய பணியாட்கள் அனைவரையும் வெளியே போங்கள் என்று கட்டளையிட்டேன். அவர்களும் பயந்து வெளியேறினர். கதவுகள் மூடப்பட்டன. என் சகோதரர்களுக்கு என்ன நடக்கிறது என்று விளங்கவில்லை. என் அழுகையை என்னால் கட்டுப்படுத்தவே முடியவில்லை.

சத்தமிட்டு அழுதேன். அடுத்த அறையில் இருந்த என் பணியாட்கள்

கேட்டனர். பார்வோனின் வீட்டாரும் கூட கேட்டனராம். என் அழுகையால் திகைத்துக் கலங்கி நின்ற என் சகோதரரிடம் சத்தமாகக் கண்ணீரோடு கூறினேன்: அதுவரை மொழிபெயர்ப்பாளர் மூலம் எகிப்திய மொழியில் பேசிவந்த நான் முதல் முறையாக எங்கள் தாய்மொழியான எபிரேய மொழியிலே கீழ்க்கண்ட வார்த்தைகளைக் கூறினேன்.

**(ஆ னீ யோசேப்பு) நான் தான் யோசேப்பு !**

**என் தகப்பனார் இன்னும் உயிரோடு இருக்கிறாரா?**

என்னுடைய இந்த வார்த்தைகளை–என் வெளிப்படுத்துதலை அவர்கள் எதிர்பார்க்கவேயில்லை. ஏற்கெனவே, பல்வேறு அதிர்ச்சிகளை அந்த சில நாட்களில் சந்தித்திருந்த அவர்களுக்கு, இது தாங்க முடியாத, அதிர்ச்சியின் உச்சக்கட்டமாக அமைந்தது.

கலக்கம் – பயம் – அவர்களைப் பிடித்தது.

இது உண்மையா–பொய்யா? தாங்கள் காண்பது கனவா–நனவா ?

என்ன நடக்கப்போகிறது ??

யாராலும் வாய் திறந்து பதில் சொல்லக்கூட தெம்பில்லை – அல்லது துணிவில்லை.

என் அழுகை ஒருவழியாக நின்றது.

சற்று தூரத்தில் நடு நடுங்கிக்கொண்டு இருந்த அவர்களை நோக்கி, " என் அருகே வாருங்கள்" என்றேன். அவர்களும் அருகே பயந்துகொண்டே வந்தனர். மீண்டும் என் வெளிப்படுத்துதலை உறுதி செய்தேன்.

"நீங்கள் எகிப்துக்குப்போகிற வணிகர்களிடம் விற்றுப்போட்ட உங்கள் சகோதரனாகிய யோசேப்பு நான் தான்".

ஏறக்குறைய இருபது ஆண்டுகளாக அவர்கள் மூடிமறைத்த "இரகசியம்" இன்று வெளிப்பட்டுவிட்டது. என்ன நடக்கப் போகிறதோ என்ற பயமும் திகிலும் இன்னும் அவர்களை விட்டுப் போகவில்லை. நான் தான் தொடர்ந்து பேசினேன்: நீங்கள் நான் எகிப்துக்கு வரும்படி விற்றுப்போட்டதால் மனம் வருந்தவேண்டாம்–கவலைப்படவேண்டாம். அது ஆண்டவரின் திட்டம். உங்களைக் காக்கும்படிக்கே தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார். இந்த வார்த்தைகள் அவர்களுக்குக் கொஞ்சம் உறுதி தந்தன.

நான் தொடர்ந்து சொன்னேன்: நாட்டிலே இரண்டு ஆண்டுகளாக இந்தப் பஞ்சம் உண்டாயிருக்கிறது. இன்னும் ஐந்து ஆண்டுகள் நீடிக்கும். உங்களின் வம்சங்கள் அழியாமல் காக்கவே தேவன் என்னை அனுப்பினார். நீங்கள் அல்ல – தேவனே என்னை அனுப்பினார். அதுமட்டுமல்ல, இப்போது பார்வோனுக்கு அடுத்த நிலையிலும் எகிப்து நாடு முழுவதற்கும் தலைவனாகவும் வைத்திருக்கிறார்.

ஆகவே, நீங்கள் சீக்கிரமாக என் தகப்பனிடம் சென்று இவற்றைக்கூறி அவரையும் உங்கள் குடும்பங்களையும் அழைத்து வாருங்கள் என்று கூறினேன். பேசிமுடித்தவுடன் என் தம்பி பென்யமீனைப் பார்த்தேன். என் உள்ளம் பொங்கியது. அவன் கழுத்தைக்கட்டிக்கொண்டு அழுதேன். அவனும் என்

கழுத்தைக்கட்டிக்கொண்டு அழுதான். பின்னர் ஒவ்வொரு சகோதரனையும் கட்டிப்பிடித்து அழுதேன்.

இந்த அழுகைப் பள்ளத்தாக்கும், கண்ணீர் நிகழ்வுகளும் ஒருவகையாக முடிந்தபின்னர் என்னுடைய சகோதரர் என்னோடு நன்றாக உரையாடத்தொடங்கினார்கள். என்னுடைய சகோதரர்கள் வந்திருக்கிறார்கள் என்கிற செய்தி பார்வோன் அரண்மனை மட்டும் பரவியது. பார்வோனும் அவரது பணியாட்களும் மிக மகிழ்ச்சியடைந்தனர்.

பார்வோன் என்னை கூப்பிட்டனுப்பினார். நானும் சென்று அவருக்கு வணக்கம் செலுத்தி நின்றேன். அவர் சொன்னார்: உன் சகோதரரை உன் நாட்டிற்கு உடனே அனுப்பு. உன் தகப்பனாரையும், அவர்களின் குடும்பத்தாரையும் எகிப்துக்கு வரச்சொல். அவர்கள் வருவதற்குரிய வண்டிகளையும் அனுப்பு. எகிப்தின் கொழுமையையும், நன்மையையும் நான் அவர்களுக்குத் தருவேன்.

இது யோசேப்பாகிய எனக்கும் மிகுந்த மகிழ்ச்சி தந்தது. பார்வோனின் ஆணைப்படி அவர்களை அனுப்பிவைத்தேன்.

அன்றிரவு யோசித்தேன்: நான் சிறையிலிருந்து விடுதலையாகி, பார்வோனின் கனவுகளை விளக்கிக் கூறி, எகிப்தின் தலைவனாக உயர்த்தப்பட்ட அந்த நாளில் "ஏன் நான் எகிப்துக்கு வந்தேன்?" யார் என்னைக் கொண்டுவந்தார்? என்ற கேள்விகளுக்கு விடை கிடைத்தது.

அடிமை வாழ்வில் எகிப்து வாழ்வு தொடங்கியது. செய்யாத குற்றத்திற்குச் சிறைத் தண்டனையும் கிடைத்தது. ஆனால் எல்லா நேரங்களிலும் "கர்த்தர் என்னோடு இருந்தார்". என் சகோதரர்களின் பொறாமையும், வெறுப்பும், சூழ்ச்சியும் என்னை எகிப்திற்குக் கொண்டுவரவில்லை. ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், என் தந்தை யாக்கோபின் தேவனுமான அந்த எல் ஷடாய் என்னும் எல்லாம் வல்ல இறைவனே அவருடைய திருச்சித்தத்தின்படி என்னைக் கொண்டுவந்தார் என்று உணர்ந்தேன்.

ஊத்ஸ் என்னும் நாட்டில் வாழ்ந்த யோபு என்பவரின் வரலாற்றை நினைத்தேன். மிகப்பெரிய பணக்காரராய் வாழ்ந்த அவருக்குச் சோதனை மேல் சோதனை வந்தது. சொத்து சம்பாத்தியம், மக்கள், பணியாட்கள் எல்லாரையும் இழந்தார். ஆனால் அவருடைய விசுவாசம் உறுதியாய் இருந்தது. அவர் இப்படிச் சொன்னாராம்: ஆனாலும் நான் போகும் வழியை அவர் (கர்த்தர்) அறிவார்; அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்" (யோபு 23:10).

கர்த்தர் என்னைச் சோதித்தார் புடமிட்டார் – கர்த்தர் என்னைப் பொன்னாக மாற்றினார். கர்த்தர் என் சகோதரரை மன்னிக்கும் சிந்தையைத் தந்தார்.

இன்னும் சில நாட்களில் அவர்கள் குடும்பத்துடன் வருவார்கள். என்னை நேசித்த என் அன்புத்தந்தை யாக்கோபு என்னும் இஸ்ரவேலும் வருவார்.

அதை நினைக்கையில் கண்கள் கசிந்தன.

என் தேவாதி தேவனைத் துதித்தேன்.

**கனவுகள் தொடரும்...** *****

# துதித்து மன்றாடுவோம்

## தமிழ்நாடு

ஜுலை-1

**கள்ளக்குறிச்சி மாவட்டம்**
**அருட்பணியாளர்: திரு. காவியகாந்த்**
**திருமதி.செல்வி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட நாரணம்பட்டி, மேல்பாச்சேரி, கெண்டிக்கல் ஆகிய கிராமங்களுக்காக, கோடை விடுமுறை சிறுவர் வேதாகமப் பள்ளியில் 110 பிள்ளைகள் கலந்து கொண்டதற்காக, திட்டமிட்ட ஊழியங்கள் தடையின்றி நடைபெற்றதற்காகத் துதிப்போம். சபைக்கு புதிய ஆத்துமாக்கள் வர, சபையில் உள்ள விசுவாசிகள் சீடர்களாக மாற, ஊழியருக்கு உடலில் உள்ள பலவீனம் நீங்கி நிறைவான சுகம் கிடைக்க, கோடை விடுமுறை வேதாமகப் பள்ளியில் கலந்து கொண்ட பிள்ளைகளின் இரட்சிப்புக்காக- அவர்களின் குடும்பம் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**கடலூர் மாவட்டம்**
**அருட்பணியாளர் : திரு. M. லிங்கம்**
**திருமதி. கலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அருகேரி, பெண்ணாடம், தொளார், எறப்பாவூர், மருவத்தூர் ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தி கேட்ட தேன்மொழி, கங்கா, ஜமுனா, ரங்கநாதன், சாரா, உமா, வீரமணி, விக்னேஷ்வரன், சுரேஷ் ஆகியோருக்காக, CBTE வகுப்பில் கலந்து கொண்ட முருகன், முத்தழகி, ஆகாஷ், மோனிஷா, செல்வி, சின்னப்பிள்ளை, மேரி ஆகியோருக்காக, பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற ஆகாஷ், திவ்யா, இன்பரசி, தீனா ஆகியோருக்காக, உமாவின் கணவருக்கு நிறைவான சுகம் கிடைத்ததற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, கோடை விடுமுறை வேதாகமப் பள்ளியில் கலந்து கொண்ட 110 பிள்ளைகள் தொடர்ந்து சபைக்கு வர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. V.சிவராமன்**
**திருமதி. பெரியநாயகி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சுமைதாங்கி, கீரனூர், இருளம்பட்டு, செம்பேறி, சின்னக்கொசப்பள்ளம் ஆகிய பகுதிகளுக்காக, நற்செய்தி கேட்ட 185 பிள்ளைகளுக்காக, பொது தேர்வில் கலந்து கொண்ட மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் பெற்றதற்காகத் துதிப்போம். சந்திரா உடல் பெலவீனத்திலிருந்து சுகம் பெற, பானுவின் கணவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற-குடும்பத்தில் சமாதானம் கிடைக்க ஜெபிப்போம்.

ஜுலை-2

**நாமக்கல் மாவட்டம்**
**அருட்பணியாளர் : திரு. S. சாமுவேல்**
**திருமதி. ரோகிணி**

நற்செய்தி பணி அறிவிக்கப்பட்ட மணியன்கால்பட்டி, தீர்த்தம்பாளையம், மோகனூர், புது தெரு ஆகிய பகுதிகளுக்காக, VBSஇல் 80 பிள்ளைகள் கலந்துகொண்டதற்காக, ஊழியரின் மகள் ஜார்லின் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தியை ஆர்வமாகக் கேட்ட ஜெயா, மீனா, ராமு, பிரபு ஆகியோர் இரட்சிக்கப்பட, மணிமேகலையின் காலில் உள்ள தீப்புண் சுகமாக, விபத்தில் சிக்கிய பார்த்திபன் தம்பதியினர் சுகம் பெற- வழக்கு சுமூகமாக முடிய, சிறுவர் ஊழியம் தொடர்ந்து நடைபெற ஜெபிப்போம்.

**ஈரோடு மாவட்டம்**
**அருட்பணியாளர்:**
**திரு.G.தனம் யோகராஜ் - திருமதி.டான்சி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சென்னம்பட்டி, கணவனூர், சனி சந்தை, கோனார்

பாளையம் ஆகிய கிராமங்களுக்காக, VBS கூடுகையில் 80 பிள்ளைகள் பங்குபெற்றதற்காக, சரஸ்வதி, தீபிகா ஆகியோர் இயேசு கிறிஸ்துவை ஏற்று கொண்டதற்காகத் துதிப்போம். VBSஇல் பங்கு கொண்ட பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட, சரஸ்வதியின் குடும்பம் இரட்சிக்கப்பட, பெரிய புலியூர் பகுதியில் ஜெபக்குழு ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. அதிசய அமலன்**
**திருமதி. ஆனந்தி விமலா**

VBS சிறுவர் ஊழியம் நல்ல முறையில் நடைபெற்றதற்காக, ஆசிரியராக உதவி செய்த மோனிஷா, கலைவாணி, பூர்விகா, நிகிலா ஆகியோருக்காக, புதிதாக ஆராதனையில் கலந்து கொண்ட முருகன், நாகம்மாள் ஆகியோருக்காகத் துதிப்போம். முருகன் தம்பதியினரின் காலில் உள்ள பலவீனத்திலிருந்து சுகம் பெற- இரட்சிக்கப்பட, மோனிஷா, கலைவாணி, பூர்விகா, நிகிலா ஆகியோர் விசுவாசத்தில் பெலப்பட, ஊழியர்களை தாங்குபவர்கள் எழும்ப, வாலிபர்கள் வேத பாட வகுப்பில் கலந்து கொள்ள, பாப்பாத்தி, ராதிகா, பெரியசாமி ஆகியோர் வீட்டில் தொடர்ந்து ஜெபக்குழு நடைபெற, ராஜா, பிரியா, சுரேஷ், லட்சுமி, மருதாச்சலம் ஆகியோர் விசுவாசத்தில் நிலைத்திருக்க, ஈஸ்வரி, தீபா, நிலா ஆகியோருடைய கல்வித் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்

**கோயம்புத்தூர் மாவட்டம்**

**ஜுலை-3**

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் : திரு. லூர்டஸ்**
**திருமதி. கிளாடிஸ்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பில்சின்னம்பளையம், குள்ளேகவுண்டனூர், உப்பிலியனூர், பூவலப்பருத்தி, சமத்தூர், கோட்டூர், அரசூர், மஞ்சநாயக்கனூர், அங்கலகுறிச்சி ஆகிய கிராமங்களுக்காக, செல்வி, ராஜபாண்டி , ராஜேஷ் , கலையரசன் ஆகியோர் நற்செய்தியை ஏற்றுக்கொண்டதற்காக, கிதியோன் திருமணம் சிறப்பாக நடைபெற்றதற்காக, VBSன் தேவைகள் சந்திக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தியை ஏற்றுக்கொண்டவர்கள் சபைக்கு வர, நான்சிக்கு சுகப்பிரசவம் கிடைக்க, அன்னாள் அம்மாவின் பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்பட, சத்தியவாணி மீண்டும் சபைக்கு வர, கோரேஷ் திருமண தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு.எபிநேசர் உவைட்**
**திருமதி. மேரி**

சந்துரு, பவித்ரா, பழனி ஆகியோர் புதிதாக சந்திக்கப்பட்டதற்காக, சாமுவேல் +2 தேர்வில் தேர்வில் தேர்ச்சி பெற்றதற்காகத் துதிப்போம். புதிதாக சந்திக்கப்பட்ட சந்துரு, பவித்ரா, பழனி ஆகியோர் இரட்சிக்கப்பட, பின்தொடர் பணிக்காக, சித்ரா ராஜன் விசுவாசத்தில் வளர, ராஜன் சர்க்கரை நோயிலிருந்து சுகம் பெற; கிருபை சுகம் பெற;குடியிருக்க வீடு கிடைக்க, பின்மாற்றத்தில் உள்ள தேவநேசன், தீனா மீண்டும் ஆலயம் வர , ஊழியரின் மகனின் திருமணத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**
**திரு. இம்மானுவேல் கிளமென்ட் கிப்ட்சன்**
**திருமதி. செல்லாண்டீஸ்வரி**

ஏழு இடங்களில் சிறுவர் ஊழியம் நடத்த தேவன் உதவி செய்ததற்காக, கிறிஸ்துராஜாவின் இடப்பிரச்சனை தீர்த்து வைக்கப்பட்டதற்காக, ஜெசிகா பத்தாம் வகுப்பில் நல்ல மதிப்பெண் பெற்றதற்காகத் துதிப்போம். பிரியா வீடு கட்டி முடிக்கப்பட- இடப்பிரச்சனை தீர்த்து வைக்கப்பட, நந்தகுமார் இரட்சிக்கப்பட, சபரி ஜான் மீண்டும் ஆலயம் வர, ஐந்து இடங்களில் நடைபெறும் சிறுவர் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

**ஜுலை-4**

**அருட்பணியாளர் :**
**திரு. R. ஸ்டீபன் செல்வகுமார்**
**திருமதி. கரோலின்**

மாரா, கண்ணப்பன், சுனிதா, சுல்தான் பேகம், பார்பின், அஜ்மல் பேகம் ஆகியோருக்காக, VBSஇல் கலந்து கொண்ட இரண்டு சிறுமிகள் மூலமாக அஸ்ஸாம் மாநிலத்தை சார்ந்த இரண்டு குடும்பங்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, பவித்ராவுக்கு அரசு வேலை கிடைத்ததற்காக, VBS ஊழியம் நல்ல முறையில் நடைபெற்றதற்காகத் துதிப்போம். மஞ்சுளா பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, காவியா, காளிமுத்து, பாலாமணி ஆகியோர் இரட்சிக்கப்பட, முத்தம்மாள் வீடு விரைவில் கட்டி முடிக்கப்பட, ஆலயம் கட்டுவதற்கு இடம் வாங்கப்பட ஜெபிப்போம்.

**திருப்பூர் மாவட்டம்**
**அருட்பணியாளர்: திரு. S. பால்ராஜ்**
**திருமதி. மரியாள்**

VBSஇல் 60 சிறுவர் சிறுமிகள் கலந்து கொண்டதற்காக, புதிதாக நற்செய்தியை ஆர்வமாய் கேட்ட பூமிகா, ரஞ்சித் குமார், பிருந்தா, பகவதி, சரஸ்வதி, சந்துரு, தியாகு, அம்பிகா, முருகன் ஆகியோருக்காகத் துதிப்போம். VBSஇல் கலந்து கொண்ட சிறுவர் சிறுமிகள் இரட்சிக்கப்பட, கம்பளியம்பட்டியில் வீட்டுத் திருச்சபை நடத்துவதற்கு வீடு கிடைக்க, ஆலய மேற்கூரை சரி செய்யப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு.G. பால்துரை**
**திருமதி. ஜெபரூபி**

கருப்பையா சிறுநீரக நோயிலிருந்து நிறைவான சுகம் பெற்றதற்காக, தமிழரசி வயிற்று வலியிலிருந்து சுகம் பெற்றதற்காக, நான்கு கிராமங்களில் 95 பிள்ளைகள் கோடை விடுமுறை சிறுவர் வேதாகமப் பள்ளியில் கலந்து கொண்டதற்காகத் துதிப்போம். அறிவழகன் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, அலெக்ஸ், அகஸ்டின், ஷாலினி, ஜீவா ஆகியோர் விசுவாசத்தில் வளர- வேலை கிடைக்க, கிளாங்குண்டல், சர்க்கரைவலசு, பாப்பா வலசு, சுள்ளிப்பெருக்கிப்பாளையம், செங்கவலசு, வடுகப்பட்டி ஆகிய பகுதிகளிலிருக்கும் பிசாசின் கட்டுகளிலிருந்து மக்கள் நற்செய்தியின் மூலம் விடுதலை பெற, நற்செய்தி அறிவிக்க வாசல்கள் திறக்கப்பட ஜெபிப்போம்.

**ஜுலை-5**

**சுயசார்புத் திருச்சபை**
**அருட்பணியாளர் :**
**அருள்திரு. சாலமோன்ராஜ்**
**திருமதி. ஜெயக்கொடி**

பல ஆண்டுகளாக இருந்து வந்த சிவக்குமாரின் இடப்பிரச்சனை தீர்த்து வைக்கப்பட்டதற்காக- பத்திரப்பதிவு செய்யப்பட்டதற்காக, லெட்சுமணன் இருதய வால்வு பெலவீன நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, பின்மாற்றத்திலிருந்த - பாப்பாத்தி சத்தியா, மரகதம், காளியம்மாள் ஆகியோர் ஆலயம் வந்ததற்காக, வடிவேல், அமலா, அருக்காணி, செல்லையா ஆகியோர் புதிதாக ஆலயம் வந்ததற்காக, ஹரிகிருஷ்ணன் - விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, தங்கராஜ்- பத்மா, மதன்குமார்-ஷெக்கினா, மோனிஷா-ராம்குமார் ஆகியோரின் திருமணம் சிறப்பாக நடைபெற்றதற்காகத் துதிப்போம். விபத்தில் பாதிக்கப்பட்ட ஆறுமுகம் (கால்-நெஞ்சு பகுதியில் ஏற்பட்ட எலும்பு முறிவு காயங்கள்) நிறைவான சுகம் பெற, செல்லத்துரை இருதய நோய்-தோள்பட்டை வலி ஆகியவற்றிலிருந்து நிறைவான சுகம் பெற, ஜெனீ, பிரிஸி, பிரியா ஆகியோருக்கு சுகப்பிரசவம் கிடைக்க, செல்வி, குமார், மாரியம்மாள், ராஜம்மாள் ஆகியோர் விஷ காய்ச்சலிலிருந்து சுகம் பெற, லூக்காவின் மனைவி முதுகுக் கட்டி நோயிலிருந்து சுகம் பெற, கல்யாணி, பாக்கியலட்சுமி, திருமலை, கிருஷ்ணசாமி ஆகியோர் மனநோயிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**திருச்சி மாவட்டம்**
**அருட்பணியாளர் : திரு. S.ஜெயக்குமார்**
**திருமதி. மரிய செல்வம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட உப்பிலியாபுரம், வெங்கடாசலபுரம், சிக்கந்தப்பூர்பாளையம், சிக்கந்தப்பூர்சோபனபுரம், கொட்டம்பட்டி,

மங்கபட்டி, வைரசெட்டிபாளையம், மாராடி, ஒக்கரை, புதுப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தி கேட்ட பச்சை முத்து, சிவகாமி, ஜெனிபர், ஆனந்தகுமார், ரமணன், வெள்ளைபாண்டி, குணசீலன், கண்ணம்மாள், ராஜேஸ்வரி, குருவம்மாள், மணிமேகலை, ஜெயந்தி, கண்ணகி, ராமசாமி, முருகேஸ்வரி, தமிழ்வண்ணன், தமிழரசி, பாலகிருஷ்ணன் ஆகியோருக்காக, சதாசிவம் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். ஸ்டீபன் குடும்பத்தின் வீடு கட்டும் தேவைகள் சந்திக்கப்பட, ஆனந்தகுமார், சித்தன் குடும்பம், பச்சைமுத்து குடும்பம் ஆகியோர் இரட்சிக்கப்பட, சரண்ராஜ் தொழில் ஆசீர்வதிக்கப்பட, ஆபிரகாமுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**திரு.B. தினேஷ் - திருமதி. எமீமா பியூலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மலையடிவாரம், நத்தமாடிபட்டி, தெற்கு தெரு ஆகிய பகுதிகளுக்காக, சிறுவர் வேதாகமக் கூடுகை சிறப்பாக நடைபெற்றதற்காக- தேவைகள் சந்திக்கப்பட்டதற்காகத் துதிப்போம். ஊழியருடைய தாயாரின் கர்ப்பப்பை கட்டி அறுவை சிகிச்சைக்கானத் தேவைகள் சந்திக்கப்பட,-நல்லமுறையில் நடைபெற-நிறைவான சுகம் கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**ஜூலை-6**

**மதுரை மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. வின்சென்ட்**
**திருமதி. பவுலின் கிரேஸ்**

ஊழியர் கண்வலியிலிருந்து சுகம் பெற்றதற்காக, ஹர்ஷி பத்தாம் வகுப்பில் நல்ல மதிப்பெண்கள் பெற்றதற்காக, தனபால் (பால்சாமி மகன்) அவர்களது குடும்பத்தினருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்டவர்கள், சிறுவர் கூடுகை மூலமாக நற்செய்தி கேட்ட 150 சிறுவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் இரட்சிக்கப்பட, நற்செய்தி கேட்ட செல்லம்மாள், சிவனம்மாள், சரசு, பிரியா, கருப்பாயி, சர்மிளா, நித்தியா, பாண்டீஸ்வரி குடும்பத்தினர், முத்துபேச்சி, சரண்யா, சரசு, ரேணுகா குடும்பத்தினர், காசிமாயன் குடும்பத்தினர், செல்லப்பாண்டி குடும்பத்தினர், பால்சாமி குடும்பத்தினர், கலைசெல்வி குடும்பத்தினர். ஆரியமாலா கணவர், லட்சுமி குடும்பத்தினர், பேச்சி, சிவனம்மாள், மல்லிகா குடும்பத்தினர், மாயக்காள், ஸ்ரீமதி, நித்தியா, மல்லிகா, சிவனம்மாள், பெரிய கருப்பன், ஆண்டிஸ், ஆண்டிஸ் மகன், நிவேதா, பரமனாண்டி மனைவி லட்சுமி ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. பிரவீன்குமார்**
**திருமதி. மீனா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அரசப்பட்டி, சமத்துவபுரம், தூம்பக்குளம், வளையன்குளம், களரிக்குடி ஆகிய கிராமங்களுக்காக, VBS கூடுகை சிறப்பாக நடைபெற்றதற்காக, ஜேம்ஸ் கால்நடை பராமரிக்க இடம் வாங்கியதற்காக, பெரிய கருப்புவின் முறிவு ஏற்பட்ட கைக்கு அறுவை சிகிச்சை தேவையில்லை என்று மருத்துவர்கள் கூறியதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. M. கார்த்தி**
**திருமதி. ரீஜா**

VBS 4 கிராமங்களில் நடைபெற்றதற்காக, கனகலட்சுமி, தேடா அம்மா, ராமத்தாயி, அனிதா ஆகியோர் புதிதாக ஆராதனையில் கலந்து கொண்டதற்காக, அருட்பணியாளர் வீடு கான்கிரீட் வேலை முடிவடைந்ததற்காகத் துதிப்போம். அதிகாலை ஜெபம் தடையில்லாமல் நடைபெற, எரேமியா, தானியேல், இம்மானுவேல் ஆகியோர் தடையின்றி திருமுழுக்கு எடுக்க, ஸ்டீபன் வீடு கட்டத் தேவைகள் சந்திக்கப்பட, டேனியலுக்கு ஏற்ற வாழ்க்கை துணை கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. A. கந்தசாமி**
**திருமதி. முருகம்மாள்**

நற்செய்தி பணி, வீடு சந்திப்புகள் செய்யப்பட்ட இந்திராகாலனி, பள்ளக்காப்பட்டி, கீழஉரப்பனூர், வாகைகுளம் பிரிவு, திருமங்கலம் ஆகிய பகுதிகளுக்காக, தியாகராணி கால் வலியிலிருந்து சுகம் பெற்றதற்காக, அனுஷ்கா, மாதவன், முருகன் ஆகியோர் நற்செய்திக்கு ஆர்வம் காட்டுவதற்காகத் துதிப்போம். விடுமுறை சிறுவர் வேதாகம கூடுகையில் கலந்து கொண்ட சிறுவர்கள் இரட்சிக்கப்பட, விக்ரம் மூளையில் ஏற்பட்ட பாதிப்பு நீங்கி சுகம் பெற, அருட்பணியாளர் வீடு மற்றும் ஆலயம் மறுசீரமைப்புப் பணி நிறைவடைய ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. P. சத்தியநாதன்**
**திருமதி. கிறிஸ்டி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட போத்தநதி, புதுப்பட்டி, கண்ணாபட்டி, குச்சம்பட்டி, சத்திரப்பட்டி, வெங்கடாசலபுரம், ரெட்டிபட்டி, முத்துலிங்கபுரம், வையூர், மறவபட்டி ஆகிய கிராமங்களுக்காக, சிறுவர் விடுமுறை வேதாகமப்பள்ளியில் 147 பிள்ளைகள் கலந்து கொண்டதற்காக, வாலிபர் கூடுகையில் 40 பிள்ளைகள் கலந்து கொண்டதற்காகத் துதிப்போம். கிருஷ்ண பிரியா, பாண்டியம்மாள் ஆகியோர் கடன் பிரச்சினையிலிருந்து விடுதலை பெற, தினேஷ் பாபு, கருப்பசாமி ஆகியோருக்கு வேலை கிடைக்க, புவனேஸ்வரி நர்சிங் படிக்க பணத்தேவைகள் சந்திக்கப்பட, சுந்தரம்மாள், சுந்தரராஜ் ஆகியோர் தலையில் ஏற்பட்டுள்ள நோயிலிருந்து சுகம் பெற, ஜெயலட்சுமிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, காளீஸ்வரனுக்கு திருமணம் நடைபெற-கடன் பிரச்சினையிலிருந்து விடுதலை பெற, விஜயலட்சுமி கணவரோடு சேர்ந்து வாழ ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :திரு. P. ராஜா**
**திருமதி. அன்னாள்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குன்னணம்பட்டி, கரடிக்கல், மொட்டைப்பாறை ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தியை ஆர்வமாகக் கேட்ட பழனியம்மா, ஜெயபாரதி, மகாலட்சுமி, பால்பாண்டி, இலக்கியா, தர்ஷினி, சுமதி ஆகியோருக்காக, விஜய், நவநீதா, ஜான்சி, தீபக், சுசீலா, கலைச்செல்வி, கௌசல்யா, ஸ்ரீநிதி, கார்த்திகா, ஜீவா, காளிமுத்து ஆகியோருக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.



**அருட்பணியாளர் : திரு. காளிமுத்து**
**திருமதி. குமுதா**

கோடை விடுமுறை சிறுவர் வேதாகம பள்ளியில் கலந்து கொண்ட 40 பிள்ளைகளுக்காக, மாதாந்திர உபவாச ஜெபம் நடைபெற்றதற்காகத் துதிப்போம். தேடாச்செல்வம் இரட்சிக்கப்பட, தங்கராமனுக்கு விரைவில் திருமணம் நடைபெற, லோகேஸ்வரனுக்கு இடது கை கால்கள் சரியாக செயல்பட, சுரேஷ்-திவ்யா தம்பதிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, VBSக்கு வந்த பிள்ளைகள் ஞாயிறு பள்ளியில் கலந்து கொள்ள ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் : திரு. ஏனோக்**
**திருமதி.பாலின் சௌந்தர்யா**

கருவேப்பிலை, கே.ஜே காலனி, ஜோதிமாணிக்கம், பிரவியம்பட்டி, கொடிக்குளம், கொடிக்குளம் காலனி ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, சபையில் உள்ள 10,11,12 படித்த அனைத்து மாணவர்களும் தேர்ச்சி பெற்றதற்காக, பால்ரத்தினம் இருசக்கர வாகன விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, செல்வத்தின் இடம் பிரச்சனை தீர்வு பெற்றதற்காக, அய்யம்மாளுக்குக் கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். கிராமங்களில் நடைபெறுகிற சிறுவர் ஊழியங்கள் தடையின்றி நடைபெற, நற்செய்தி கேட்ட புதிய ஆத்துமாக்கள் ஆராதனையில் கலந்து கொள்ள, சபை விசுவாசிகள் சீஷர்களாக எழும்ப

ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் : திரு. M. அகஸ்டின்**
**திருமதி. ஜோஸ்பின்**

செல்லம்பட்டி, வாலாந்தூர், செங்கம்பட்டி, காந்திநகர், மணல்பட்டி, சக்கரப்பட்டி ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, கஜேந்திரனுக்கு கிடைத்த விடுதலைக்காகத் துதிப்போம். அந்தோணிராஜ், வனிதா, வீரம்மாள் ஆகியோரின் வீடுகள் கட்டி முடிக்கப்பட– தேவைகள் சந்திக்கப்பட, ஹரியின் குடும்பம் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற, சபை மக்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர, சபை வாலிபர்களுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**சகோதரி. எஸ்தர் செல்வராணி**

ஜுலை-9

நற்செய்தி அறிவிக்கப்பட்ட லிங்கப்பநாயக்கனூர், சுளிஒச்சான்பட்டி, கொப்பிலிப்பட்டி, அப்பணம்பட்டி, திம்மநத்தம் ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். மகிழம்மா, ரேவதி, ராணி, ஒச்சம்மா, மாணிக்கம் ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**திரு. பிலிப் முருகன்**

குளத்துப்பட்டியில் நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, வாலிபர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**அருள்திரு.M. மூவேந்திரன்**
**திருமதி. விஜயா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அயோத்திபட்டி, வகுரணி ஆகிய கிராமங்களுக்காக, மீனா நன்றாக நடக்க ஆரம்பித்ததற்காக, வீரபாண்டி விஷப்பாம்பு கடியிலியிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, ஆலயத்திற்குத் தேவையான மின்விளக்கு, மின்விசிறித் தேவைகள் சந்திக்கப்பட்டதற்காக, சிறுவர் விடுமுறை வேதாகமப்பள்ளி சிறப்பாக நடைபெற்றதற்காக, மனிஷா, தீபா, தமிழ்ச்செல்வி, அஸ்வின், சாரதா, கமலக்கண்ணன், அர்ச்சனா தேவி, புனிதா, வெற்றி, விஜயராகவன், சித்ரா ஆகியோருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். நற்செய்திக்கு ஆர்வம் காட்டும் வனிதா, தீபா, விஜயலட்சுமி, புனிதா, லதா, சந்திரா ஆகியோர் இரட்சிக்கப்பட, முத்துப்பேச்சி, ஜெயலட்சுமி, சரஸ்வதி, சாந்தா ஆகியோர் மீண்டும் ஆலயம் வர, பெருமாள் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, சின்னச்சாமி, வீரபாண்டி, பரமசிவம், கன்னிச்சாமி, சோலை பாண்டி, ராஜ்குமார், ரமேஷ், எப்சிபா, மலை ராஜன், கமலக்கண்ணன், அர்ச்சனா தேவி, பெரிய குமார், சூர்யா, அமுது, கார்த்திக், அருள், முத்துப்பாண்டி ஆகியோர் இயேசுவை ஏற்றுக் கொள்ள, ஜான், மணி, மோசஸ், வீரபாண்டி, ராஜன் ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, முத்துமாரிக்கு சுகப்பிரசவம் கிடைக்க, காவியாவிற்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. A. பால்ராஜ்**
**திருமதி. ஏஞ்சல்**

புதிதாக சந்திக்கப்பட்ட ஆத்துமாக்கள் சத்தியா, துவாரகன், விக்னேஷ், தினேஷ், அகிலா, இருளப்பன், மணி, வினிதா, பால்பாண்டி, ரோஜா ஆகியோருக்காக, புதிதாக ஆராதனையில் கலந்து கொண்ட வினிதா, சேகர், சத்தியா, துவாரகன், வினிதா ஆகியோருக்காக, லீலா பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காகத் துதிப்போம். சக்தி கடன் பிரச்னையிலிருந்து விடுதலை பெற, துவாரகன் போதைப் பழக்கத்திலிருந்து விடுதலை பெற, வனிதா (குழந்தை பாக்கியம்), இருளப்பன் குடும்பங்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. G. ஜெகன்**
**திருமதி. திவ்யா**

ஜுலை-10

நற்செய்தி அறிவிக்கப்பட்ட உச்சப்பட்டி, சிவன் நகர், இந்திரா நகர், முனியாண்டிபுரம்,

பொம்மையாபுரம், பெருமாள்பட்டி ஆகிய பகுதிகளுக்காக, கோடை விடுமுறை சிறுவர் வேதாகமப் பள்ளியில் 170 பிள்ளைகள் கலந்து கொண்டதற்காகத் துதிப்போம். கௌசல்யா, மதுபாலா, தக்ஷனாஸ்ரீ, அருண், ஜெயசீலன், பிரியதர்ஷினி ஆகியோர் தொடர்ந்து ஆலயத்திற்கு வர, சித்ரா குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, அகிலா குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, ஜெரினுக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**திரு. ஜஸ்டின் சாமுவேல் – திருமதி. சுபா**

பிரியா பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காக, புதிதாக ஆராதனையில் கலந்து கொண்ட புவனேஸ்வரிக்காக, VBSயில் கலந்து கொண்ட 160 பிள்ளைகளுக்காகத் துதிப்போம். ஆரோக்கியராஜ் மது பழக்கத்திலிருந்து விடுதலை பெற–மனைவி புஷ்பா இரண்டு பிள்ளைகளும் இரட்சிக்கப்பட, ரவிச்சந்திரன் முடக்குவாத நோயிலிருந்து சுகம் பெற, மகாலட்சுமி விசுவாசத்தில் பெலப்பட–திருமுழுக்கு பெற, காந்திநகர் பகுதியில் புதிய ஜெப குழு ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் : திரு. வயநாட்டுமுத்து**
**திருமதி. கனியமுது**

ஊழியரின் மகள் ஜெசிந்தாவிற்கு தேவன் கொடுத்த ஆண் குழந்தைக்காகவும் சிறுவர் ஊழியத்தில் கலந்து கொண்ட 85 பிள்ளைகளுக்காக, 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு படித்த சபைப் பிள்ளைகள் அதிக மதிப்பெண்கள் எடுத்து தேர்ச்சி பெற்றதற்காகத் துதிப்போம். கனகா, முத்துலட்சுமி, பாண்டீஸ்வரி ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, சீதாவிற்கு விரைவில் திருமணம் நடைபெற–நிரந்தரமாக வேலை கிடைக்க, சாந்தகுமார், சாமுவேல் ஆகியோருக்கு நிரந்தர வேலை கிடைக்க, ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, செல்லப்பாண்டி–மீனா ஆகியோர் தடைகள் நீங்கி ஆலயம் வர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. J. ஜெயகுமார்**
**திருமதி. கனி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தனக்கன்குளம், மணப்பட்டி, அடைக்கம்பட்டி, வெள்ளைப் பாறைப்பட்டி, முத்துப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தியை ஆர்வமாகக் கேட்ட ஜனங்களுக்காக, கோடை விடுமுறை சிறுவர் வேதாகமப் பள்ளி தடை இல்லாமல் நடைபெற்றதற்காகத் துதிப்போம். கோடை விடுமுறை சிறுவர் வேதாகம பள்ளியில் கலந்து கொண்ட 128 பிள்ளைகளும் இரட்சிக்கப்பட, வாலிபர்கள் ஊழியத்திற்கு அர்ப்பணிக்க ஜெபிப்போம்.

**தேனி மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. P. தேவதாஸ்**
**திருமதி. பிலோமினா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வண்டியூர், கரட்டுப்பட்டி, ராமகிருஷ்ணாபுரம், பாலக்கோம்பை, இராய வேலூர், அழகாபுரி, ஆவாரம்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தி கேட்ட பொன்னம்மாளுக்காக, ரெபேக்காளுக்கு நிறைவான சுகம் கிடைத்ததற்காகத் துதிப்போம். ஷீலா, சகரியா ஆகியோர் குடும்ப சமாதானத்திற்காக, இராய வேலூர், வண்டியூர் ஆகிய கிராமங்களில் ஜெபக்குழு ஏற்படுத்தப்பட, சின்னம்மாள், சொக்கலிங்கம் குடும்பத்தார் தொடர்ந்து சபைக்கு வர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு.G. நாதன்**
**திருமதி. மேகலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பொன்னம்மாள்பட்டி, தேக்கம்பட்டி, மீனாட்சிபுரம், அடைக்கம்பட்டி, முத்துநாயக்கன்பட்டி, சமத்துவபுரம், அன்னை இந்திரா நகர், கண்டமனூர் ஆகிய பகுதிகளுக்காக, திவ்யாவுக்குத் திருமணம் நடைபெற்றதற்காக, இனியா பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காகத் துதிப்போம். தாயை இழந்த ஊழியர்

குடும்பத்தினருக்கு தேவன் ஆறுதல் தர, கிளாரா குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, நந்தினி, கெவின் ஆகியோர் வலிப்பு நோயிலிருந்து சுகம் பெற, பிரிந்து சென்ற சாந்தகுமாரி–பிரியாவின் தகப்பனார் மீண்டும் திரும்பி வர ஜெபிப்போம்.

**ஜுலை-12**

**அருட்பணியாளர் :**

**திரு.J.உலகநாதன்–திருமதி. சுபா**

ரம்யா, ரகுபதி ஆகியோருக்கு நல்ல வேலை கிடைத்ததற்காக, பாண்டியன் வீடு கட்டப்பட்டதற்காக, பிச்சைக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். ஸ்டாலின், மகேந்திரன் ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, அறிவழகன் இரட்சிக்கப்பட–குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, சில்வியாவிற்கு சுகப்பிரசவம் கிடைக்க, சுசீலா கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற, சிவா குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, பிரித்விராஜ் நல்ல முறையில் படிக்க, மகேஸ்வரி, சந்தனராஜ் ஆகியோர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, விஜயலட்சுமி வயிற்று வலியிலிருந்து சுகம் பெற, மகளை இழந்து வாடும் குணசேகரனுக்கு ஆறுதல் கிடைக்க ஜெபிப்போம்.

**விருதுநகர் மாவட்டம்**

**அருட்பணியாளர் :**

**அருள்திரு.B. சாமுவேல் கணேசன்**

**திருமதி. விஜயா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தண்டியனேந்தல், தோணுகால், காலனி, புளியம்பட்டி ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். இன்பம், செல்லப்பன் ஆகியோர் வீடு கட்டுமானத் தேவைகள் சந்திக்கப்பட, குருசாமி சிறுநீரக நோயிலிருந்து நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

**தென்காசி மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. J. பவுல்ராஜ்**

**திருமதி. எமீமாள்.**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட திருமலாபுரம், மேல சிவகாமிபுரம், மகேந்திரவாடி, புதுக்குளம், கொக்குளம், தடியாபுரம், மடத்துப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, அருணுக்கு அரசு வேலை கிடைத்ததற்காக, அரவிந்த், மனோஜ் ஆகியோருக்கு வேலை கிடைத்ததற்காக, சுமதி இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, சேஷன்–அபி திருமணம் நடைபெற்றதற்காகத் துதிப்போம். கெர்சோம்–இளவரசி, அருண்–தீபிகா ஆகிய தம்பதியினருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, அன்னம்மாளின் கணவர் மீண்டும் அவரோடு சேர்ந்து வாழ, முருகேசனுக்கு கண் பார்வை கிடைக்க, பாலசந்திரனுக்கு அரசு வேலை கிடைக்க, சீமோனுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, ஜெய்க்கனி கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**ஜுலை-13**

**விழுப்புரம் மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு.D. தங்கராஜ்**

**திருமதி. எஸ்தர் பிரியா**

நற்செய்திப் பணி செய்யப்பட்ட மடப்பட்டு, இருந்தை, மருகப்பட்டு, அரும்பட்டு, செம்மனேந்தல் ஆகிய கிராமங்களுக்காக, கோடை விடுமுறை சிறுவர் வேதாகமப்பள்ளி சிறந்த முறையில் நடைபெற்றதற்காக, பத்தாம் வகுப்பு தேர்வில் பெனிதா, அபினேஷ், தேவிப்பிரியா ஆகியோர் நல்ல மதிப்பெண்கள் பெற்றதற்காக, சத்யாவுக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். கணேசனுக்கு இருதய அறுவைச் சிகிச்சை நல்லமுறையில் நடைபெற, பெர்னார்ட் பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்பட, கலைவாணிக்கு ஏற்ற வாழ்க்கை துணை கிடைக்க, ரமேஷ் குடிப்பழக்கத்தில் இருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**தரிசனம் பரப்புவோர்**

இயக்கத்தின் பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்பட, புதிய தரிசனம் பரப்புவோர் கிடைக்க, புதிய ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட, திரு.T. விஜயசங்கர் (தரிசனம் பரப்புவோர் உதவி இயக்குநர்), அருள்திரு. பீட்டர் (ஜெப

ஒருங்கிணைப்பாளர்), ஊழியர்கள்: திரு.R.பாலசுப்பிரமணியன், திருமதி. ஹெர்சி லீதியாள் மாசில்லாமணி, திருமதி.C. மேபல்ராணி, திருமதி. இந்திராணி கில்பர்ட், திருமதி. தீபா மோசஸ், திருமதி.J. பிளஸ்ஸி, திரு. வினு, திருமதி. ராணி வின்செண்ட், திரு.K. பால்ராஜ், திரு.S. சம்பத்குமார், திரு. தாங்லம் ஜோ, திரு. காளிமுத்து, திரு.A. தம்புராஜ், திரு.P. மரியானந்தன் மாற்கு, திருமதி. சுப்புலட்சுமி, திருமதி.T. சுசீலா, திரு.M.M. சாலமோன், திரு.F. ஹென்றி ஜார்ஜ், திருமதி.A. சம்மனசு மேரி, திரு.A. ஜோசப் ஆசீர்வாதம், திரு.A. மகுடீஸ்வரன், திரு.J.P. ரவிக்குமார், திருமதி. பியூலா திருவாசகி, திருமதி. ஜான்சி டயானா, திரு.S. கிருஷ்ணமூர்த்தி, திருமதி.V. சுவேகா, திரு.ஞானசேகரன், திரு. ஜெயராமன், திரு. கிறிஸ்டோபால் கணேஷ் ஆகியோரின் பயணப் பாதுகாவலுக்காக, குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

**பணித்தளங்களின் பொறுப்பாளர்கள்**

அருள்திரு.V. இம்மானுவேல் பாண்டி (தென்னிந்திய பணித்தள உதவி இயக்குநர்), திரு.C. ராஜரத்தினம் (சொத்து பராமரிப்பாளர்), திரு. தாங் பாவ் ஹோகிப் (வட இந்தியப் பணித்தள ஒருங்கிணைப்பாளர்) ஜெபிப்போம்.

**ஜூலை-14**

## மொழிபெயர்ப்புப் பணி

மொழி பெயர்ப்பாளர் திருமதி. ஷீலா நாகராஜனுக்குத் தேவையான ஞானம் கிடைக்க, மொழி பெயர்ப்பு உதவியாளர்கள் திரு.சுக்மன் மாத்லாம், திரு.கசியா மாத்லாம், செல்வி.மங்கள்தாய் ஆகியோருக்காக, நடைபெற்றுவரும் பழைய ஏற்பாட்டு மொழி பெயர்ப்பு விரைவில் முடிவடைய, யாத்திராகமம் மற்றும் சங்கீதம் ஆகிய மொழி பெயர்ப்பின் ஆய்வுப்பணிகள் நல்லமுறையில் நடைபெற, கோண்டி மொழி ஆடியோ வேதாகமம், தேவையான கோண்டி மக்களுக்கு விரைவில் கிடைக்க ஜெபிப்போம்.

**தலைமை அலுவலகம்**

அலுவலகத் தேவைகள் சந்திக்கப்பட, இயக்கத்தை நடத்தத் தேவையான ஞானம், பெலன், வழிநடத்துதல் மற்றும் பணித்தளச் சந்திப்புக்காக, பொதுச்சேவகர் அருள்திரு.அ. லெஸ்லி நாகராஜன், துணைப் பொதுச்சேவகர் திரு.S. டேவிட் சாலமோன், அருள்திரு.G. பொன்னுராஜ், திரு.A. சாம் டென்சிங், திரு.A. ஆஷிஸ், திரு.Y. பிரான்சிஸ் ராஜா, திரு.V.S. தம்பிராஜ், திரு.S. ஞானசேகர், திரு.A. பிரபாகரன், திருமதி. ஜான்ஸி ஜெய கிருபா, திரு.D. சைமன், செல்வி. S.செஹானா ஜெசுனி, திருமதி. சாரா ஜான் ஆகியோருக்காக, நடைபெறவிருக்கும் பொதுக்குழுக் கூட்டங்களுக்காக, நிதியாண்டு தணிக்கை நல்லமுறையில் நடைபெற ஜெபிப்போம்.

**வளரும் விண்ணரசு**

ஒவ்வொரு மாதமும் இதழ் தடையின்றி வெளியிடப்படுவதற்காக- தேவைகள் சந்திக்கப்படுவதற்காகத் துதிப்போம். இதழில் கட்டுரை எழுதுபவர்களுக்காக, அவர்களுடைய குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட, இதழிலுள்ள ஒவ்வொரு பகுதியும் வாசிக்கிறவர்களுக்கு பயனுள்ளதாக இருக்க, ஆசிரியர் குழுவினரின் முயற்சிகள் ஆசீர்வதிக்கப்பட, புதுமையான முறையில் இதழ் வெளியிடப்பட ஜெபிப்போம்.

**ஜூலை-15**

**நிறுவனர்கள்**

டாக்டர்.N.J. ஞானையா மற்றும் திருமதி. ரஞ்சினி ஞானையா ஆகியோருக்காக, நிறுவனரின் எழுத்துப்பணி மற்றும் அருட்பணி ஊழியங்களுக்காகவும், திருமதி. ரஞ்சினி ஞானையா அவர்கள் பெண்கள் நடுவிலும், வேதபாட வகுப்புகள் மூலமும் செய்து வரும் அருட்பணிகளுக்காகவும் ஜெபிப்போம்.

**நிர்வாகம்**

செயற்குழு உறுப்பினர்கள் திரு.J. எபிநேசர் மார்டின், Dr.S. அருண், திரு.K ஜான்சன், திரு.P. கோபால கிருஷ்ணன், Dr.

தினகரன் ரிச்சர்ட், திரு. J.E. பால் ஆபிரகாம், திரு. வெஸ்லி ஜோயல் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

**இறையியல் கல்வி**

இறையியல் கல்வி பயிலும் 18 பேருக்காகத் துதிப்போம். சுரேந்திரா காவ்டே, திபேஷ் சலாம், உபேஷ் சலாம், ரமேஷ் வாடே, ராம்நாத் வாடே, லலிதா கருங்கா, சுனிதா வாடே, ரஜனி சலாம், சுக்யாரின் மண்டாவி, அஷ்வந்தி கச்லாம், சவிதா நுரெட்டி, சத்தியசீலன், ரெஜினா மேரி, பிரின்ஸ் ராய்சன், ரேணுகா, ராஜ்மன், சோம்சிங், நெதன்லங் ஆகியோர் சிறப்பான முறையில் இறையியல் கல்வி கற்றுத் தேற ஜெபிப்போம்.

**புலம்பெயர்ந்தோர் அருட்பணியாளர்:**

**கன்னியாகுமரி மாவட்டம்**

**அருட்பணியாளர்: திரு. ஓமெந்திராகுமார்**

**திருமதி. சவீத்தா குமாரி**

**ஜூலை-16**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சீயோன் நகர், பார்வதிபுரம், ஆனந்த் நகர், கோணம், கம்பிபாலம், ஆசாரிபள்ளம் ஆகிய பகுதிகளுக்காக, தேவு குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றதற்காகத் துதிப்போம். சங்கர் நுரையீரல் நோயிலிருந்து சுகம் பெற, லங்கேஷ் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, புஷ்பாவின் குழந்தைக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**சென்னை மாவட்டம்**

**திரு. தினகரன்**

**திருமதி. லீனா குமாரி கிரேஸ்**

இந்தி பேசும் மக்கள் நடுவில் நற்செய்தி அறிவிக்கப்பட்டு வருவதற்காகத் துதிப்போம். பெருங்குடி, கேபிகே நகர் தாம்பரம் ஆகிய பகுதிகளில் நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, இந்தி பேசும் மக்கள் நடுவில் ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

**மத்திய இந்தியா – மகாராஷ்டிரா**

**அருட்பணியாளர்:**

**திரு. க்யானேஷ் லால்பகதூர் தாக்குர்**

ஜுனோனா, பத்மாபூர் ஆகிய இடங்களில் ஆராதனைகள் நடைபெறுவதற்காக, மாலைநேர வகுப்புகள் நடைபெறுவதற்காகத் துதிப்போம். மாலைநேர வகுப்புகள் மூலமாக சந்திக்கப்படும் மாணவர்கள் இரட்சிக்கப்பட, நல்லமுறையில் கல்வி கற்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. ஃபனின்ட்ரா பார்**

ரமேஷ் யாதவ் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காகத் துதிப்போம். சபை தரத்திலும், எண்ணிக்கையிலும் வளர, ஊழியரின் பிள்ளைகளுக்கு விரைவில் திருமணம் நடைபெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

நடுப்பட்டியைச் சேர்ந்த ராமாயி, விக்கிரகத்தை வழிபட்டு வந்தவர், சிலுவை நாதரின் அமுதமொழிகளால் ஆட்கொள்ளப்பட்டு, இயேசுவின் அடியவரானார். ஆனால், குடும்பத்தினரின் எதிர்ப்பால், ஆராதனைக்கு செல்ல தடைப்பட்டார். அவருடைய இளைய மகனின் பொறுப்பற்ற நடவடிக்கைக்கும், அவர் இயேசு கிறிஸ்துவின் மீது வைத்த நம்பிக்கைதான் காரணம் என்று குடும்பத்தினர் குற்றம் சாட்டினர். ஆனால், ராமாயி தடைகளைக் கண்டு சோர்ந்து போகாமல், பழிச்சொல்லைக் கண்டு பயந்து போகாமல், இயேசு கிறிஸ்துவின் மீது கொண்ட விசுவாசத்தினால், தொடர்ந்து மன்றாடினார். சில நாட்களில் இளைய மகன் பொறுப்பாக செயல்பட ஆரம்பித்தான். ஆலயம் செல்வதற்கு குடும்பத்தினர் கொண்டு வந்த தடையும் விலகியது. இப்போது, விடுதலையோடு ஆண்டவரை ராமாயி ஆராதிக்கிறார். அல்லேலூயா.

அருள்திரு. மூவேந்திரன்.

# கிறிஸ்டியன் பிரடரிக் ஸ்வார்ட்ஸ்

(1726-1798)

ஜெர்மனி நாட்டில் 1726இல் பிறந்தவர் ஸ்வார்ட்ஸ். தமிழ்நாட்டில் அருட்பணியாற்றி ஜெர்மனிக்குத் திரும்பிய அனுபவம் மிகுந்த பெஞ்சமின் சுல்ட்ஸ் (1689-1760) என்னும் அருட்பணியாளரிடம் உறவு கிடைத்தது. சுல்ட்ஸ் என்னும் அருட்பணியாளர் சீகன்பால்க் தொடங்கிய தமிழ் வேதாகமத்தை நிறைவு செய்தவர். தமிழில் சிறந்தவர்.



ஸ்வார்ட்ஸ் மொழிகளைக் கற்றுக் கொள்ளும் திறமை படைத்தவர்; இளம் வயதிலேயே லத்தீன், கிரேக்கம், எபிரேயம் ஆகிய மொழிகளை அறிந்தவர். ஆகவே சுல்ட்ஸ், ஸ்வார்ட்ஸுக்குத் தமிழ் கற்றுக்கொடுத்தார். அவரும் விரைந்து தமிழ் கற்றார். அவரின் திறமையைக் கண்ட சுல்ட்ஸ், அவரை தமிழகத்திற்கு அருட்பணியாளராகச் செல்லும்படி ஊக்குவித்தார். ஆண்டவரின் அழைப்பும் வந்தது.

ஜெர்மன் மொழி, தமிழ் ஆகிய இரண்டு மொழிகள் மட்டும் தெரிந்த ஸ்வார்ட்ஸ் அன்றைய இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி வளரத் தொடங்கியதால் ஆங்கிலம் கற்க வேண்டும் என்று இங்கிலாந்து சென்று விரைவாக ஆங்கிலத்திலும் தேர்ச்சி பெற்றார்.

தன்னுடைய 24ஆம் வயதில் 1750இல் இந்தியாவில் தரங்கம்பாடியில் வந்து இறங்கினார். பின்னர் திருச்சியில் உள்ள படைவீரர்களுக்குப் போதகரானார். திருச்சியில் உள்ள பிஷப் ஹீபர் பள்ளி, வெஸ்ட்ரி பள்ளி ஆகியவற்றைத் தொடங்கியவர் இவரே.

தஞ்சாவூரில் மராத்தியர் ஆண்ட காலம். அப்போது மன்னராயிருந்த துளசி அரசரின் நட்பு கிடைத்தது. விரைவில் அவர் மராத்தி மொழியையும் கற்றுக்கொண்டார். (தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளும் கற்றுக்கொண்டார்). துளசி மன்னர் இவரை தஞ்சாவூருக்கு வரும்படி அழைத்தார். மன்னருடைய மரணப்படுக்கையில் அவர் வளர்ப்பு மகனும் பின்னர் அரசராகும் உரிமை பெற்றவருமான இளம் வயது சரபோஜியை வளர்க்கும் பொறுப்பை சுவார்ட்ஸிடம் கொடுத்தார். சுவார்ட்ஸ் அவரையும், புகழ்பெற்ற வேதநாயகம் சாஸ்திரியாரையும் கல்வியிலும் மற்றவற்றிலும் குருகுல முறைப்படி கற்றுக் கொடுத்து வளர்த்தார் என்பது வரலாறு.

நற்செய்தியை உற்சாகமாக அறிவிக்கும் ஆற்றல் வாய்ந்த ஸ்வார்ட்ஸ், பலரை இயேசுவின் அடியவர்களாக மாற்றினார். தஞ்சாவூர், இராமநாதபுரம் ஆகிய இடங்களில் நல்ல பள்ளிகளைத் தொடங்கி கல்வியைத் தமிழகத்தில் பரப்பியவர். (அந்த இராமநாதபுரம் பள்ளியில் படித்தவர்தான் முன்னாள் குடியரசுத் தலைவரான டாக்டர் அப்துல் கலாம்!)

ஹைதர்அலி மைசூரில் ஆண்ட காலம் அது. ஆங்கிலேயர்களுக்கும் அவருக்கும் நடந்த பேச்சுவார்த்தைகளில் இவர் ஆங்கிலேயர்களுக்காகப் பேசும்படி அனுப்பப் பட்டாராம்.

சுமார் 48 ஆண்டுகள் திருமணம் ஆகாமலே ஆண்டவருக்காக தமிழ்நாட்டில் உழைத்த அவர் தனது 72ஆம் வயதில் தஞ்சாவூரில் இறந்தார். அவருடைய உடல் தூய பேதுரு ஆலயத்தில் (மானம்பூச்சாவடியில் உள்ளது) அடக்கம் செய்யப்பட்டது. அரசரான சரபோஜி தன் ஆசிரியருக்காக ஓர் அழகான கவிதை எழுதினாராம். அது அவர் கல்லறையில் கல்வெட்டாக இன்றும் உள்ளது. சென்னையிலுள்ள தூய மேரி ஆலயத்திலும் அவர் நினைவு வாசகங்கள் உள்ளன.

சுவார்ட்ஸ் என்னும் அருட்பணியாளரின் தன்னலமற்ற அருட்பணியை நாம் மறக்கவே முடியாது. ***

## வட இந்தியா

**அருட்பணியாளர்கள்:**

**திரு. சுக்ராம், திரு. ஜுகேஷ்**

ஜுலை-17

நற்செய்தி அறிவிக்கப்பட்ட நயாபாரா, பங்களாபாரா, பக்ரூபாரா ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ரமேஷ், சுக்லு, சாந்து, சுனித்தா, மன்பிரீத், தஸ்ரு ஆகியோருக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. ராம்பொரஸ் போயாம்**
**திருமதி. சங்கீதா போயாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கொங்கேரா, பூஜாவாகி, மலேச்சூர் ஆகிய கிராமங்களுக்காக, ரஸாய்க்கு தேவன் தந்த சுகத்திற்காக, மன்கே உடல் எரிச்சலிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். மாசுகோட்டா, தஸ்ரதா ஆகியோர் விசுவாசத்தில் வளர, மலேச்சூர், கொங்கேரா ஆகிய கிராமங்களில் நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சந்து சலாம்**
**திருமதி. சோன்பத்தி சலாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட போர்காவ், குருஸ்நார், படே ஜம்ரி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட சிங்லால், ரிப்புத்திரின், சுகான் ஆகியோருக்காக, பிரகாஷ், ரிப்போத்திரின், புனெய் ஆகியோருக்குக் கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். சிங்லால், ஈஸ்வர் ஆகியோர் விசுவாசத்தில் வளர, நமே குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, திக்கேஷ், மகேஸ்வரி, இத்தேஷ் ஆகியோர் நல்லமுறையில் படிக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. மங்கலு மாத்லாம்**
**திருமதி. சுசீலா மாத்லாம்**

ஜுலை-18

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாட்பால், ஷியாநார், பூசுவால் ஆகிய கிராமங்களுக்காக, சாந்தி விஷப்பூச்சிகளிடமிருந்து பாதுகாக்கப்பட்டதற்காகத் துதிப்போம். பாயல் குடும்பம் இரட்சிக்கப்பட, பூல்மதி நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. கஸியா துக்கா**
**திருமதி. ரூப்பாய் துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஜாக்ரி, அமாஸாரா, கோகுடா, கன்கரா ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ஜெய்நாத் போயமுக்காகத் துதிப்போம். சோம்பத்தி–ஜான்கு குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, ராம்நாத் கொர்ரம் மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்ள, புவனேஷ் துரு விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சாது துக்கா**
**திருமதி. ரசாய் துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஆம்காவ், சிப்ரேல், மஸ்பூர், தெர்தூல், தாடோநார், தாடோபால் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட சன்வரி, ராஜன் ஆகியோருக்காகத் துதிப்போம். சோம்தாய், சோம்பத்தி ஆகியோருக்கு சுகப்பிரசவம் கிடைக்க ஜெபிப்போம்.

ஜுலை-19

**அருட்பணியாளர்: திரு. புத்சிங் வட்டே**
**திருமதி. ரெய்னி வட்டே**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஒங்நார், மட்டாவண்ட், மாத்லா, ஏதேம்பால் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ரமேஷ் பொட்டாய்க்காக, சுக்சிங், சந்திரபதி ஆகியோருக்கு கிடைத்த சுகத்திற்காக, ரானே ரூப்ஜிக்கு 11 வருடங்களுக்குப் பிறகு குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காகத் துதிப்போம். விபத்தில் வலதுகை பாதிக்கப்பட்ட குஷி, ஜெய்மதி,சோனி, ஆதித் வட்டே ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, லிம்சூ, ஜாரி, ஆயுத்து, மெகேஷ், ராம்லால், சேகரு, காவே, லூலா, கம்லு ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. ஜுகுல் சலாம்**
**திருமதி. சொனாரி சலாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சாந்தாகாவ், சோனாபால், பாக்பேடா, கிதும்பேடா, சிர்பூர் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட புத்னி சலாமுக்காகத் துதிப்போம். சுக்மதிக்கு நிறைவான சுகம் கிடைக்க, பஜ்னி பொட்டாய் மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்ள ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. தஸ்ரு பொட்டாய்**
**திருமதி. ஜெய்மதி பொட்டாய்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாவ்டி, கோட்லி ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். லக்கன் சலாம், மணீஷ் சலாம், சாம்தேர், சன்பத்தி கச்லாமின் பிள்ளைகள் ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: செல்வி. கசினி துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மொடேங்கா, பல்னா, சிங்னார், பலோடா பூட்டான் சாதுகாவ், உடித்காவ் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட வலஜேவுக்காக, ஷியாராம் விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, மன்வதி, மன்ஸா ஆகியோர் மலேரியாவிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். ஜோபி, லகரு, சேத்ராம், கடாபா, பக்யா, வீராசிங், பூல்சிங், காடோ ஆகியோர் இரட்சிக்கப்பட, சேத்து குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு.தேசிராம் வட்டே**
**திருமதி. ரானோ வட்டே**

**ஜுலை-20**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட காராவாண்ட், மூஞ்மெட்டா, சிவ்னி, திம்நார் ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். பல்லிராம் மணடாவி மூலநோயிலிருந்து சுகம் பெற ஸதாய் யாதவுக்கு திருமணம் நடைபெற, ஊழியரின் பிள்ளைகளுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. ஜக்நாத்குமிட்டி**
**திருமதி. சுக்கோ குமிட்டி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பிடுகாபேடா, பரண்டா, கேராபட், ஜோட்டே, ஜெய்பூரிஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ஷியாராம், ராம்லால் சலாம், கலாவதி ஆகியோருக்காகத் துதிப்போம். சன்பத்தி ( 3மாத இடுப்பு வலி), ஸய்ரே குமிட்டி, ரமேஷ் நுரெட்டி, கன்னி, ரியாஸ் ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு.லட்சு கருங்கா**
**திருமதி. புல்தாய் கருங்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட போர்பால், கட்காகாவ், கொர்ரா, இருக்கோ, கட்காகாவ், சீண்டுபாரா, ஈத்கஜா ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக ஆராதனையில் கலந்து கொள்கிற மேகெத்தர், மங்கலு ஆகியோருக்காகத் துதிப்போம். பிரதிக்கயா, சுனா ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, மங்கேல் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சன்னு துக்கா**
**திருமதி. மனிஷா துக்கா**

**ஜுலை-21**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மார்க்கபேடா, மூங்மேடா, காப்சி ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். ஊழியருக்கு நிறைவான சுகம் கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. சுக்மன் பொட்டாய்**
**திருமதி. சுக்மி பொட்டாய்**
**செல்வி. ராம்தாய் குமிட்டி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மட்டாவாண்ட், நாராயண்பூர் ஆகிய கிராமங்களுக்காக, உபவாச ஜெபம், பழைய ஏற்பாடு மொழி பெயர்ப்பு ஆகியவை நடைபெறுவதற்காக, ஜீத்ராமின் திருமணம் ஆசீர்வாதமாக நடைபெற்றதற்காகத் துதிப்போம். சுக்மி துக்காவுக்கு நிறைவான சுகம் கிடைக்க, சாமுவேல் பொட்டாய், சூசன்னா பொட்டாய் ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**செல்வி. கோத்தாய் பொட்டாய்**
**செல்வி. பஜாரி கருங்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வேத்மாகோட், மண்டோகி, மொரஸ்கோடா, பரஸ்காவ் ஆகிய கிரமங்களுக்காக, புதிதாக

நற்செய்தி கேட்ட மகேஷ், துலேஷ் யாதவ் ஆகியோருக்காக, திஷ்ஸா, சுமன் ஆகியோர் தேர்வில் வெற்றி பெற்றதற்காகத் துதிப்போம். ஆஸாராம் மகேஷ் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, லட்சந்தாய் யாதவ், ஆஸாராம் யாதவ் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, சந்தோஸிக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. பஜ்நாத் சலாம்**
**திருமதி. சொனாரி சலாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குட்ரபாரா, ரேமாவாண்ட், பக்ரூ பாரா, பாத்ரூடண்ட் பாரா, சாந்தி நகர் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட சந்தோஷி, மங்கலி ஆகியோருக்காக, தஸ்ரிக்கு குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காக, புத்னி சந்துரு, லட்சந்தி துக்கா ஆகியோருக்குக் கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். பர்மிளாவிற்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, ரேமாவாண்ட் பணித்தளத்தில் நற்செய்தி அறிவிக்கவுள்ள எதிர்ப்புகள் மறைய ஜெபிப்போம்.

**ஜுலை-22**

**அருட்பணியாளர்:**
**திருமதி. தன்பத்தி பொட்டாய்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கொகுடா, ரேமாவண்ட், நயானார் ஆகிய கிராமங்களுக்காக, மகேஷ் வட்டேயின் திருமணம் தடையின்றி நடைபெற்றதற்காகத் துதிப்போம். ஊழியம் செய்ய காணப்படும் எதிர்ப்புகள் மறைய ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சொகாய் கருங்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தேவ்காவ், கொகுடா, கோடுகாவ், பிரள்பட் ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். ராஸாய் முழங்கால் காயத்திலிருந்து சுகம் பெற, பிரேம்வதி குடும்பத்தினர் இரட்சிக்கப்பட, சுகாய், போஜ்ராஜ் ஆகியோர் மனநோயிலிருந்து சுகம் பெற, முன்னி இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. லால்சாய் பொட்டாய்**
**திருமதி. சீத்தா பொட்டாய்**

நற்செய்தி அறிக்கப்பட்ட கோங்லா, ஸாரா, முஸ்குடும், முண்டுபால் ஆகிய கிராமங்களுக்காக, ஊழியர் மலேரியாவிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். விபத்தில் பாதிக்கப்பட்ட சுக்தேவுக்கு நிறைவான சுகம் கிடைக்க, கச்சரி, லட்சுமணன் ஆகியோர் இரட்சிக்கப்பட, மால்மத்தி பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, சீதாய் பொட்டாய் வயிற்று வலியிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. மான்சிங் கச்லாம்**

**ஜுலை-23**

**திருமதி. சுல்மதி கச்லாம்**

நற்செய்தி அறிக்கப்பட்ட கோங்லா, ஸாரா, முஸ்குடும், முண்டுபால் ஆகிய கிராமங்களுக்காக, ராம்லால் வட்டேவுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். அமர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, ஷீமா பொட்டாய் எலும்பு முறிவிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சந்துராம் வட்டே**
**திருமதி. சுகோந்தின்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கங்கால், கர்மாரி, தாடோநார் ஆகிய பகுதிகளுக்காக, ஜியாபதி விஷப்பூச்சி கடியிலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காகத் துதிப்போம். புத்ராம் கோடா மனநோயிலிருந்து சுகம் பெற, சுக்மதி கர்ப்பப்பை நோயிலிருந்து சுகம் பெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**ஜார்கண்ட் மாநிலம்**

**அருட்பணியாளர்: திரு. குந்தர் பகெல்**
**திருமதி. மம்தா பகெல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மாங்கை, பல்ராம்பூர், டால்டோன் கன்ச், சந்தாவா, லாம்பி, டாடாபானி ஆகிய கிராமங்களுக்காக, விஜய் பாகடா புதிதாக ஆராதனையில் கலந்து கொள்வதற்காக, புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஆலயக்கட்டுமானப்பணிக்காகத் துதிப்போம். வினித் டோப்போ, பிரதீமா ஆகியோர் விசுவாசத்தில் வளர, ஆலயக்கட்டுமானத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. மங்கள் மராண்டி**

**ஜுலை-24**

**திருமதி. சுகாஜினி சௌரேன்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட லப்தா காடி, ஜர்ஜுடி, காட்பாந்தா, கில்ஹா, பாதேலா, சோட்டாபோக்ரிய்யா, ஜாகேஷ்வர் ஆகிய கிராமங்களுக்காக, தலாமய் டுட்டு கண்

நோயிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். லூக்கிராம் இரட்சிக்கப்பட, ஸர்கார் கெம்ப்ரோம் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க ஜெபிப்போம்.

**உத்தரப்பிரதேசம்**

**(அவாதி, மிஸ்ரா, ராஜ்புத், கௌதம், தாக்கூர், சௌகான், சௌத்ரி-ஆகிய மக்கள் கூட்டத்தினர்)**

**அருட்பணியாளர்: திரு. ராம்ஜியவான்**
**திருமதி. ராஜ்லட்சுமி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பிஸ்வா, இஸ்பாபூர், மதன்பூர், மெய்பத்பூர், சரெய்யா, மூரத்பூர், ஜம்பா, பூடான்பூர், பிஜென்டா, படாய்பூர், கங்காபூர், மடியாவா, ஜான்பூர், கினோத்தி ஆகிய கிராமங்களுக்காக, சுதீர்–சுர்தீஷ் ஆகியோரின் திருமணம் நல்லமுறையில் நடைபெற்றதற்காக, மாதுரி விஷப்பாம்பின் கடியிலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, மன்சு பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காக, சாந்திதேவி மூலநோயிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். நியவந்தி (டைபாய்டு காய்ச்சல்), ராம்சனேகி(மலேரியா), பவன் (மனநோய்), வினோத் (விபத்துக்காயங்கள்), சரோஷ் (சிறுநீரகக்கல் நோய்)ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, ஷீமாவிற்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, ரஞ்சித் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. மிதிலேஷ்குமார்**
**திருமதி. சுனித்தா தேவி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பக்கரியாஹர், மூடா, சுத்தரி, குச்சல்ஹா, ஹரெய்யா, லங்கடிபூர், ஹசரியா, கோலா, காவேல்பூர், மாட்டாபூர்வா, மஜ்ரா, சிரெய்ஜா, சுர்ஜி பூர்வா, கூஷ்மௌரி, திங்கூர் பூர்வா, மாணிக்பூர் ஆகிய கிராமங்களுக்காக, கோமல் முகக்காயங்களிலிருந்து சுகம் பெற்றதற்காக, கிர்ஜாதயால் (மூலநோய்), ஜுலிதேவி (இரத்தவாந்தி)ஆகியோருக்கு சுகம் கிடைத்ததற்காக, பூஜாதேவிக்கு குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காகத் துதிப்போம். ராதாதேவி (சிறுநீரகக்கல் நோய்), அனாமிக்கா (திக்குவாய்) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, பங்கஜ்–சத்யா ஆகியோர் இரட்சிக்கப்பட, மம்தா தேவிக்கு விரைவில் திருமணம் நடைபெற, ஆர்த்திக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

**ஆந்திரா மாநிலம் (தென்னிந்தியா)**

**அருட்பணியாளர்:**

**ஜுலை-25**

**திரு. வெங்கடேஸ்வரலு**
**திருமதி. கடம் புஷ்பம் குமாரி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட டொட்லவாரமிட்டா, நாயுடுபேட்டா, கானூரு ஆகிய கிராமங்களுக்காக, "ஏனாதி" மக்கள் கூட்டத்தைச் சேர்ந்த வெங்கடேஷ் வீட்டில் தொடங்கப்பட்டுள்ள ஜெப குழுவிற்காகத் துதிப்போம். சாய் போதை பழக்கத்திலிருந்து விடுதலை பெற, லட்சுமி இரட்சிக்கப்பட, சபைக்கு தேவையான இடம் மற்றும் கட்டுமான பணிகளுக்காக, ஜெஸ்ஸிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, மணி இரட்சிக்கப்பட, மனம்மி, சைமன் பீட்டர் ஆகியோர் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. பால் வீரமணி**
**திருமதி. பெல்சியா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கானூரு, டொட்லவாரமிட்டா, மலகோட்டா ஆகிய கிராமங்களுக்காக, ஹரி, ஜீவன் ஆகியோருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். உள்ளூர் மொழி நடையில் "தெலுங்கு"மொழியைப் பேச–எழுத, சபை இல்லாத இடங்களில் திருச்சபை தொடங்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. உதய்குமார்**
**திருமதி. பிரசன்னா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வெங்கடரெட்டி காலனி, சிந்தாரெட்டிபாளையம் ஆகிய கிராமங்களுக்காக, தேவசேனா, யாமினி, சேசம்மா, ஹரிசுரேஸ் ஆகியோர் நற்செய்திக்கு ஆர்வம் காட்டியதற்காகத்

துதிப்போம். சபையின் அவசியமான தேவையான கழிப்பறை(சகோதரிகள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள்) கட்டப்பட, ஊழியருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**ஜுலை-26**

**அருட்பணியாளர்:**

**திரு. பத்தலா மதுசுதாகர்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பெரிமிடி, துவாரகாபுரம் ஆகிய கிராமங்களுக்காக, சந்திர ரெட்டி, மாஸ்தனம்மா, மட்டி லக்ஸ்மய்யா ஆகியோருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, ஊழியருடைய மனைவி அனுபாமா இரத்தப்போக்கு நோயிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். திருச்சபைக்கு மின் இணைப்பு கிடைக்க ஜெபிப்போம்.

**கர்நாடக மாநிலம் - தேவனஹள்ளி(தென்னிந்தியா)**

**அருட்பணியாளர்:**

**திரு. சாமுவேல் பிரபாகர்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வெங்கடப்பூர், தர்பனஹள்ளி ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தி பணிக்கு ஊழியருடன் இணைந்து செயல்படுகிற கிருஷ்ணப்பா குடும்பத்திற்காக, நற்செய்திக்கு ஆர்வம் காட்டிய முனிகிருஷ்ணா, ரகு, இராஜப்பா, நாஜம்மா ஆகியோருக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**ஒடிசா**

**அருட்பணியாளர்: திரு. டேனியல் சாந்தா**
**திருமதி. புலிமி சாந்தா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குமுடகுடா, ஒச்சன் குடா, காசிகுடா, பேலாபுட், மாட்டிக்கல் ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். ஒச்சங்குடாவில் நற்செய்தி அறிவிக்க உள்ள எதிர்ப்புகள் மறைய, ராமோ, கொங்குலு, தனோ, சாம்பிரி, சங்கர், தொங்கிரி, தொய்னா, சொனாய், சாந்தோ, சோபனா ஆகியோர் இரட்சிக்கப்பட, லக்னோ, சுடுங்கி, கோண்டிலி ஆகியோர் விசுவாசத்தில் வளர, கொங்கா குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, ஜெபிப்போம்.

**ஜுலை-27**

**அருட்பணியாளர்:**

**திரு. அப்பொல் மண்டல்**
**திருமதி. சுமித்ரா மண்டல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சிலிடோங்கிரி, கோன்ஷாப் பாரா, துமர்திகி, பரசுண்டி, தொட்ரபாரா ஆகிய கிராமங்களுக்காக, சுக்ரு புதிதாக ஆராதனையில் கலந்து கொள்வதற்காகத் துதிப்போம். ராய்கர் பிளாக்கில் நற்செய்தி அறிவிக்க ஏற்பட்டுள்ள எதிர்ப்புகள் மறைய, சத்னாமி இன மக்கள் நடுவில் நற்செய்தி அறிவிக்க திறந்த வாசல் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திருமதி. ஜானகி மாஜி**
**திரு. லெலன்-திருமதி.பிரிட்டி லெலன்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சிமிலி குடா, பாப்லி, கபித்தா, நாகூல், மான்பார் ஆகிய கிராமங்களுக்காக, பப்லி, துளஸா ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். பிளஸி குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, பகத் சிறையிலிருந்து விடுதலை பெற, மம்தாவிற்கு சுகப்பிரசவம் கிடைக்க, பனுவாகுடா கிராமத்தில் நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**குக்கி அருட்பணியாளர்கள் (வடகிழக்கு மாநிலங்கள்)**

**அருட்பணியாளர்: திரு. நபின் நர்ஜினரி**
**(அருணாச்சல பிரதேசம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அலுபாரி, சிவாஜி நகர், லோஹித்பூர், பயா, மேகய்லியங், கோரலியங், டாப்ரஹான், தெல்லுலியங், பயன், 20ஆவது மைல் ஆகிய பகுதிகளுக்காக, தெபோராள் ப்ளஸ் டூவில் தேர்ச்சி பெற்றதற்காகத்துதிப்போம். சங்கீதா நரம்பு நோயிலிருந்து சுகம் பெற, (APFRA) மதமாற்றத் தடைச்சட்டம் நீக்கப்பட ஜெபிப்போம்.

**ஜுலை-28**

**அருட்பணியாளர்:**

**திரு. தங்காலுன் கிப்கின் (அஸ்ஸாம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ருகாசன், மோலன், அமராஞ்சன், வோம்லி, ஐவ்ஜங், எக்ரானி, ஷுகஞ்சன் ஆகிய பகுதிகளுக்காக, வீட்டுக்கூட்டம், நோயுற்றவர்களை சந்தித்தல், உபவாச ஜெபம் ஆகியவை தொடர்ந்து நடைபெறுவதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. ஆபிரகாம் தௌதாங்**
**(மேற்கு வங்கம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தெபித்ங்கா, பாபுபாஷா, சில்வர் டேல், சிஆர்பிஎப் குடியிருப்பு, சிவ்மந்திர் ஆகிய பகுதிகளுக்காக, வீட்டுக்கூட்டம், உபவாசக்கூட்டம் ஆகியவை நடைபெறுவதற்காகத் துதிப்போம். ரியா, ரோமா, நிகிதா, தீரஜ், அமிசா, அர்பிதா, ஆருஷி, ஜாய் முண்டா, அமிரத் நாயக், சுஷ்மிதா ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**ஜுலை-29**

**அருட்பணியாளர்:**
**திரு. ஹெம்ஹோசன் ஹோகிப்**
**(அருணாச்சல பிரதேசம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பெகுலியங், கெப்ருலியங், ஹடிதுபா, யய்லிங் ஆகிய பகுதிகளுக்காக, உபவாச ஜெபம், குடும்பக்கூட்டம் ஆகியவை நடைபெற்றதற்காக, ஊழியர் இசைப்பயிற்சியை முடித்ததற்காக, சர்மா நேபாளி சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். ஊழியர், சபை செயலர், பொருளர் ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. இங்காம்போ ஹோகிப் (அஸ்ஸாம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அம்ரஜன், கர்பி, ஆங்லாங் ஆகிய பகுதிகளுக்காக, உபவாச ஜெபம், குடும்பக்கூட்டம் ஆகியவை நடைபெற்றதற்காக, குக்கி, கர்பி, கச்சாரி ஆகிய இனக்குழுக்கள் நடுவில் நற்செய்தி அறிவிக்கும் பணி நடைபெற்றதற்காகத் துதிப்போம். பள்ளி நிர்வாகம் நல்லமுறையில் செய்யப்பட, மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் ஆகியோரின் பாதுகாப்புக்காக, ஆசிரியர்கள் சிறப்பான முறையில் கற்றுக் கொடுக்க, விடுதியில் பயிலும் மாணவர்கள் நல்லமுறையில் படிக்க, ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஊழியர்கள் ஒருமனதோடு செயல்பட, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. செய்கோதாங் ஹோகிப் (சிக்கிம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சோம், மேல் மாங்மோ, டென்டம் மருத்துவமனை ஆகிய பகுதிகளுக்காக, மோனியும், அவருடைய மனைவியும் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். டிக்காராம் ஆலயம் கட்டுவதற்கு இடம் கொடுத்ததற்காக, டென்டாமில் ஆலயம் கட்டப்பட—தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**ஜுலை-30**

**அருட்பணியாளர்:**
**திரு. சத்யாபாஸி மோல்சம் (திரிபுரா)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட எம்புருட் சேரா, கமலா சேரா, மேகஸின், ஹவாய்பாரி ஆகிய பகுதிகளுக்காக, உபவாச ஜெபம், குடும்பக் கூட்டம் ஆகியவை நடைபெற்றதற்காகத் துதிப்போம். ஊழியரின் மகனுக்கு அரசு கல்வி உதவித்தொகை கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. செய்கோலன் குய்டி (திரிபுரா)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட நெய்லஹா, டான்சாரா, எம்புருட் சேரா, பங்க்ஜங்க், கெய்கன், ஜாவ்காவ், லாங்ஜோல், முன்பி ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, அய்சால் போட்டித்தேர்வுகளில் வெற்றி பெற, சஞ்சு, சங்கியின் கணவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. லென்ஹோகோ ஹோகிப் (திரிபுரா)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஜாவ்ல்காவ், ஸ்ரீலங்கா, சால்டாசெரா, எம்புருட்

சேரா, டான்சாரா ஆகிய பகுதிகளுக்காக, வேத ஆராய்ச்சிக்கூட்டம், உபவாச ஜெபம், குடும்பக்கூட்டம், திரைப்பட ஊழியம் நடைபெற்றதற்காகத் துதிப்போம். ஊழியரின் தாயார் டைபாய்டு காய்ச்சலிலிருந்து சுகம் பெற, சஞ்சுரி மோல்சம் விசுவாசத்தில் பெலப்பட, ஆராதனைக்கு வரவிடாமல் தடுக்கும் சங்கி மோல்சமின் கணவர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**ஜூலை-31**

**அருட்பணியாளர்:**

**திரு. செய்மிங்தங் கிப்கின் (மணிப்பூர்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கேம்ங்காய், காங்குய், கேமிங்பாய், ஹோலப், பைஜிங், மோங்தங், கங்க்போக்பி, ஹோலிஜங் ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். மணிப்பூர் அகதிகள் முகாமிலுள்ளவர்கள் மீண்டும் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. ஸ்டீபன் லுங்கோஜின் (சிக்கிம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மார்டம், மேற்கு சிக்கிம் ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். பாரம்பரிய கலாச்சாரம்– பண்பாட்டை பெற்றுள்ள இந்த மக்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ள, ஆலோசனை மையம் அமைக்கப்பட, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**செல்வி. லிங்னெய்கிம் (அருணாச்சல பிரதேசம்)**

மாணவர் ஐக்கியம், வேதாகம வகுப்பு, ஆராதனை ஆகியவை நடைபெறுவதற்காக, மாணவர்கள் நல்லமுறையில் தேர்ச்சி பெற்றதற்காக, மாணவர் ஐக்கியம், வேத ஆராய்ச்சி வகுப்பு, ஆங்கில ஆராதனை ஆகியவை நடைபெறுவதற்காகத் துதிப்போம். மாணவர் விடுதி விரிவாக்கம் செய்யப்பட, விடுதி காப்பாளருக்கு வீடு கட்டப்பட, மாணவர்கள் கல்வியிலும், ஆவிக்குரிய வாழ்விலும் சிறந்து விளங்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. ஹோலன்லால் கிப்கின் (அருணாச்சல பிரதேசம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட நியூ மேகலியங், சிவாஜி நகர், ஜெலக் பாரி, பயஹாம், தங்லத், ஹஜூஹாம், திகாரு நதி, ஹலியாங், சைடியாங், பழங்குடியினர் குடியிருப்பு ஆகிய பகுதிகளுக்காக, ஊழியரின் தகப்பனார் நிறைவான சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். சொடேலு, பஜங்சாய் தமாய், பனோலு ஆகியோர் நிறைவான சுகம் பெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

## 2025 ஜூன் மாத வேத வினாக்களுக்கு விடைகள்

### யோவான் 1-7 அதிகாரங்கள் வரை

**பொருத்துக**

| | | |
|---|---|---|
| 1. தோற்றம் | – நீதி | 7:24 |
| 2. திபேரியா | – கலிலேயா | 6:1 |
| 3. பெதஸ்தா | – குளம் | 5:2 |
| 4. சமாரியா | – சீகார் | 4:5 |
| 5. சாட்சி | – முத்திரை | 3:33 |

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. தாவீதின், பெத்லகேம், கிறிஸ்து, வேதவாக்கியம் 7:42
2. வேதவாக்கியங்களை, நித்திய ஜீவன் 5:39
3. சொஸ்தமானாய், கேடானதொன்றும், பாவஞ்செய்யாதே 5:14
4. ஆவியாயிருக்கிறார், ஆவியோடும், உண்மையோடும் 4:24
5. மாம்சத்தினால், ஆவியினால், ஆவியாயிருக்கும் 3:6

**விடை எழுதுக**

1. வேதத்தை அறியாத ஜனங்கள் 7:49
2. கப்பர்நகூமுக்கு 6:24
3. யோவான் 5:35
4. குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன். 3:36
5. கிருபையின் மேல் கிருபை 1:16

## அருட்பணியாற்ற அர்ப்பணித்துள்ளவரா? உங்களுக்காகத்தான்!

இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன், இந்தியாவிலுள்ள சந்திக்கப்படாத மக்கள் கூட்டங்களை நற்செய்தியால் சந்திக்கும் சபை பாகுபாடற்ற ஓர் அருட்பணி இயக்கமாகும். ஆண்டவரின் சத்தம் கேட்டு, அவர் சித்தம் செய்ய அர்ப்பணித்துள்ள இயேசுவின் சீடர்களே, எங்களுடன் இணைந்து அருட்பணியாற்ற உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

கீழ்க்காணும் தகுதியுள்ள ஆண்/பெண் அருட்பணியாளர்கள், தங்களுடைய விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கோ அல்லது மின்னஞ்சலுக்கோ அனுப்புங்கள்.

**கல்வித்தகுதி:** குறைந்தபட்சம் பன்னிரெண்டாம் வகுப்பு மற்றும் இறையியல் கல்வி.

**வயது:** 21 வயதுக்கு மேல்.

தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் இந்தியாவில் **ICGM** அருட்பணியாற்றும் எந்த மாநிலத்திலும் அருட்பணியாற்ற அனுப்பப்படுவார்கள்.


**பொதுச்சேவகர்,**

**இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன்,**

58/1. முத்தாலம்மன் கோயில் தெரு, சேலையூர், சென்னை- 600073.

**அலைபேசி:** 9003916482 **மின்னஞ்சல்:** contacticgm@gmail.com


## ICGM வங்கி கணக்கு விபரங்கள்

அருட்பணியாளர் உதவி மற்றும் பொதுவான காணிக்கைக்காக

**Account Name : INDIA CHURCH GROWTH MISSION**
**Account Number: 10143136773**
**Bank : State Bank of India**
**Branch Name : Selaiyur, Chennai-73**
**IFSC Code : SBIN0007948**

icgm1014@sbi

ஆலயக் கட்டிட நிதிக்காக

**Account Name : INDIA CHURCH GROWTH MISSION**
**Account Number: 1119454531**
**Bank : State Bank of India**
**Branch Name : Vinayaganagar, Madurai.**
**IFSC Code : SBIN0001479**

மருத்துவ நிதிக்காக

**Account Name : ICGM MEDICAL EMERGENCY ENDOWMENT FUND**
**Account Number: 31961036921**
**Bank : State Bank of India**
**Branch Name : SELAIYUR, Chennai-73.**
**IFSC Code : SBIN0007948**

வங்கி மூலமாக காணிக்கைகளை அனுப்புபவர்கள், அவ்விபரங்களை நமது அலுவலகத்திற்கு கடிதம் மூலமாகவோ, **SMS** மூலமாகவோ/ **Whatsapp** மூலமாகவோ 94421 50482 என்ற எண்ணுக்கு தகவல் அனுப்பும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

மேலேயுள்ள **QR** கோடை பயன்படுத்தியும் உங்களுடைய காணிக்கையைச் செலுத்தலாம்.



வேதாகமத்தின் பக்கங்களிலே "அருட்பணி" **08**

# இஸ்ரவேல் மட்டுமல்ல – பல்வேறு வகை மக்களும்

Dr.N.J. ஞானையா







**ஜான்:** குட் ஈவினிங் மாணிக்கம். கடந்த ஒரு வாரம் உலகச் செய்திகள் விறுவிறுப்படைந்துள்ளன. எங்கு பார்த்தாலும், ஒருபக்கம் போர்ச்செய்திகள், மற்றொருபக்கம் இயற்கையின் சீற்றம்.

**மாணிக்கம்:** நீ நன்றாகக் கவனித்தால் இந்த உலகச் செய்திகள் ஒரு சிறு நாடான "இஸ்ரவேலைச்" சுற்றி வருவதாகவும் அமைகின்றன.

**ஜான்:** அதுவும் மிக உண்மையே. இன்று நமது ஆசிரியரிடம் கேட்க ஒரு நல்ல தலைப்புக் கிடைத்துள்ளது.

(பேராசிரியர் சாலமோன் வருகிறார்)

**சாலமோன்:** குட் ஈவினிங் தம்பிகளே! இரண்டுபேர் முகத்திலேயும் ஒரு கேள்வி துள்ளுகிறதே?! அது என்ன கேள்வி?

**ஜானும் மாணிக்கமும்:** சார், கடவுள் ஏற்படுத்திய உடன்படிக்கைகள் பற்றிப் போன வாரம் அழகான விளக்கம் கொடுத்தீர்கள். ஆனால், அந்த உடன்படிக்கைகள் எல்லாமே "**இஸ்ரவேலர்**" எனப்படும் யூதர்களுக்குத்தானே. மற்ற மக்களைக்குறித்து கடவுள் கவலைப்படுவதில்லையா?

**சாலமோன்:** அருமையான கேள்வி! ஆபிரகாமில் இருந்துதான் "**இஸ்ரவேல்**" என்னும் யூத இனம் தோன்றியது. (ஒருவகையில் ஆபிரகாமின் பேரனான யாக்கோபுடைய பெயர்தான் இஸ்ரவேலாகியது!) ஆனால், ஆபிரகாமுக்கு முன்னர் வாழ்ந்த நோவா யார்? அவரிடம்தானே முதல் உடன்படிக்கை தொடங்கியது! ஆதியாகமம் 9ஆம் அதிகாரம், ஆண்டவர் எல்லா மக்களிடமும் அன்பு வைத்து ஏற்படுத்திய

உடன்படிக்கையை அழகாகக் கூறுகிறதே.

**ஜான்:** சிந்தனையைத் தூண்டும் ஒரு அருமையான குறிப்பு. வேறு என்ன இதுபற்றிக் கூறுவீர்கள்?

**சாலமோன்:** ஆபிரகாமின் வாழ்வில் வரும் ஒரு புரிந்துகொள்ள முடியாத நபரின் குறிப்பு!

**மாணிக்கம்:** அந்த நபர் யார் ?

**சாலமோன்:** அவர் பெயர் மெல்கிசேதேக். ஜான், நீ வைத்திருக்கும் வேதாகமத்தில் ஆதியாகமம் 14: 18 –19 வாசி.

**ஜான்:** "அன்றியும் உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு, அப்பமும்,திராட்சரசமும் கொண்டு வந்து, அவனை (ஆபிரகாமை) ஆசீர்வதித்து: வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிராமுக்கு உண்டாவதாக".

**சாலமோன்:** மெல்கிசேதேக் யாரென்று நமக்குத்தெரியவில்லை. ஆனால், அவர் பற்றிய விளக்கவுரையை எபிரேயர் 7ஆம் அதிகாரம் கூறுகிறது. சாலேம் என்பது எருசலேமைக்குறிக்கும். ஒருவகையில் இயேசுவை முன்னறிவித்தவர் மெல்கிசேதேக்கு என்றும் கூறலாம். ஆனால், அவர் யூதரல்ல.

**மாணிக்கம்:** இது ஒரு வியப்பான ஒரு செய்தி!

**சாலமோன்:** வேறு சில பெயர்களும், இதை நமக்கு வலியுறுத்திச் சொல்லும். யோபு என்பவரின் வரலாறு, ஆபிரகாமுடன் தொடர்பு இல்லாதது. மோசேயின் மாமனாரான எத்திரோ அடுத்த எடுத்துக்காட்டு.

**ஜான்:** எத்திரோ என்பவர் மீதியான் நாட்டின் ஆசாரியனல்லவா! (யாத் 3:1)

**சாலமோன்:** அது உண்மைதான். ஆனால், யாத்திராகமம் 18: 8–12ஐ வாசித்துப்பார்த்தால், எப்படி அந்த எத்திரோ "கர்த்தரைத் துதிப்பதை"ப் பார்க்கலாம். கர்த்தர் எல்லாத் தேவர்களைப் பார்க்கிலும் பெரியவர் என்பதை அறிந்திருக்கிறேன் என்று கூறுவதோடு மட்டுமல்லாமல், தேவனுக்குப் பலி செலுத்துதலையும் வாசிக்கிறோம். எத்திரோவின் மனம் திரும்புதல் என்று கூட அதை நாம் கூறலாம். நாம் கவனிக்கவேண்டியது, கர்த்தர் மீதியானியரின் ஆசாரியரையே மாற்றினார் என்பது தான்.

**சாலமோன்:** அண்மையில் நான் "Found by Love" என்ற நூலை வாசித்தேன். ராகில் பட்டேல் (Rahil Patel) என்னும் ஒரு இந்துமத பூசாரிக்கு, எப்படி கடவுளின் வெளிப்பாடு கிடைத்து, அவர் இயேசுவின் அடியவராகி இப்போது ஒரு நற்செய்தியாளராக இங்கிலாந்து நாட்டில் உள்ளார் என்ற நூல். ஆகவே, எத்திரோவில் தொடங்கியது இன்றும் தொடர்கிறது என்று கூடக் கூறலாம்.

**மாணிக்கம்:** நான் ஆதியாகமம் 20ஐ வாசித்தபோது, தென்கானானிய நாட்டு அரசனான அபிமெலேக்கு என்பவர், ஆபிரகாம் சாராளைத் தன் சகோதரி என்று (பொய்) சொன்னதால், அவளைத் தன்னிடம் அழைப்பித்தார். ஆனால், இரவிலே தேவன் அவரிடம் பேசினார் – எச்சரித்தார்; அவரும் அந்த எச்சரிப்புக்குக் கீழ்படிந்தார் என்ற குறிப்பு வியப்பாக இருந்தது. ஆபிரகாமுக்கு வெளிப்படுத்திய ஆண்டவர், அந்த வேற்று

இன மன்னனான அபிமெலேக்குவுக்கும் வெளிப்படுத்தியுள்ளார் அல்லவா!

**சாலமோன்:** நல்ல குறிப்பு. எனக்கு இன்னொரு வரலாற்று நிகழ்ச்சியும் நினைவுக்கு வருகிறது. அது 2 ராஜாக்கள் 5ஆம் அதிகாரத்தில் வரும் நாகமான் என்பவரின் வரலாறு. அவர் சீரிய அரசரின் படைத்தலைவர். அவர்கள் நாட்டு "ரிம்மோன்" தெய்வத்தை வணங்குபவர். ஆனால், அவருடைய தொழுநோய் கர்த்தருடைய வார்த்தையைச் சொன்ன எலிசாவின் மூலம் குணமாகிறது. அவர் எலிசாவின் முன் நின்று "இதோ இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத் தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்பதை அறிந்திருக்கிறேன்" (2 ராஜா 5:15) என்று பறைசாற்றுகிறார். எத்திரோவின் மனமாற்றம் – மனந்திரும்புதல் நாகமானுக்கும் நிகழ்கிறது.

**ஜான்:** அப்படியானால் இஸ்ரவேலின் இடம் என்ன?

**சாலமோன்:** நல்ல கேள்வி! கர்த்தர் ஆபிரகாமின் மூலம் யூத மக்களை அல்லது இஸ்ரவேலரைச் சிறப்பாகத் தெரிந்து கொண்டார். அவர்களைப் பெயர் சொல்லி அழைத்தார். (ஏசாயா 45:4). ஆனால், அவர்களை "ஜாதிகளுக்கு ஒளியாக" (ஏசாயா 42:7) வைத்தார். அவர்கள் மூலம் மற்ற இனத்தவரும், அந்த உண்மையான தேவனை அறிந்து கொள்ளவேண்டும் என்பதே அவருடைய நோக்கம். அண்மையில் நான் படித்த ஒரு வேதப்பகுதி என்னை வியப்பில் ஆழ்த்தியது.

**மாணிக்கம்:** அது என்ன பகுதி? சொல்லுங்கள் வாசிக்கிறேன்.

**சாலமோன்:** ஏசாயா 19:24-25

**மாணிக்கம்:** "அக்காலத்திலே இஸ்ரவேல் எகிப்தோடும், அசீரியாவோடும், மூன்றாவதாக பூமியின் நடுவில் ஆசீர்வாதமாயிருக்கும். அவர்களைக் குறித்து சேனைகளின் கர்த்தர்: எகிப்தியராகிய என் ஜனமும், அசீரியராகிய என் கரத்தின் கிரியையும், இஸ்ரவேலராகிய என் சுதந்திரமும் ஆசீர்வதிக்கப்பட்டது என்று சொல்லி அவர்களை ஆசீர்வதிப்பார்".

**ஜான்:** இதுவரை நான் அந்தப்பகுதியைக் கவனமாகப் படித்ததில்லை. எகிப்தியரை "என் ஜனம்" என்றும், அசீரியரை "என் கரத்தின் கிரியை" என்றும் கூறிவிட்டு மூன்றாவதாக என்று "இஸ்ரவேலாகிய என் சுதந்திரம்" என்றழைத்த விதம் இன்று நாங்கள் கேட்ட கேள்விகளுக்கு ஓர் அற்புத பதில் அளித்துவிட்டது.

**சாலமோன்:** ஆம்! தேவனுடைய அன்பும், பேராயர் லெஸ்லி நியூபிகின் எழுதியது போல, அவருடைய கிருபையும் எல்லா மக்களுக்குமே. நேரம் ஆகிவிட்டது. அடுத்த வாரம் சந்திப்போம்.

**ஜானும், மாணிக்கமும்:** ரொம்ப நன்றி சார். மிக மிக அருமையான வேதப்பகுதிகளும், விளக்கங்களும்.

**அடுத்த மாதமும் தொடருவோம்...**

**வளரும் விண்ணரசுவுக்கு சந்தா அனுப்பி பத்திரிக்கை ஊழியம் சிறக்க உதவுங்கள்**



## 2025 ஜுன் மாத வேத வினா – விடை போட்டியில் சரியான விடைகள் எழுதியவர்களைப் பாராட்டுகிறோம்.

**மதுரை**
மனோகராஜ்
ஞானசிரோன்மணி
ஹேமலதா வில்சன்
கலா செல்வகுமாரி
பங்கஜம் மார்த்தாண்டம்
ரஜினி பியூலா ஷோபிகா
ஆசீர்வாதம்
தெல்மா ஸ்டான்லி
சம்பு ஜெயச்சந்திரன்
ரத்னாபாய் ஜேசுதாசன்
அருள்மொழி ஜான்சன்
ஜெமி ஸ்டீபன்
ஜெர்லி இம்மானுவேல்
வினோதினி
ஆண்ட்ரூஸ்
டேவிட் ஜெயச்சந்திரன்
குளோரி மல்லிகா
ராணி ஸ்டான்லி பால்
சுசீலா ஆபிரகாம்
ஷீலா சுரேஷ்
ஜான்சி காமராஜ்

**கன்னியாகுமரி**
செல்வராஜ்
கிறிஸ்டாபெல் ஜெயந்தி
டேவிட்சன்
மோகன் சி கமலம்
பமீலா எட்வின்
ரோஹிணி ஜேசன்
பிராகரன்ஸ் தங்கராஜ்
பியூலா ஜான்சன்
ஜெபஜோதிபாய்
லீலா அய்யாக்கண்
ரமணி ராஜகுமார்
லில்லி புஷ்பம்
டேவிட் மனோகர்
சாம் அன்பு சகாயம்
லலிதா நெல்சன்
ரெத்னா ராஜ்குமார்
தேவசகாயம்

**திருநெல்வேலி**
சந்திரபோஸ்
ஜான்சி சந்தியா
ஹெலன் ரோஸ் ஜீவன்தாஸ்
வசந்தா பாலசேகரன்
செல்வராஜ்
ரூபி செல்வராணி
ஜெபா நியூட்டன்
லதா
சாந்தி ராஜன்
அன்பு சுதந்திரம்
தாமஸ்
பத்மா ராஜையா
ரஜுலா செல்வின்
சந்திரலீலா திரவியம்
வயலட் கிறிஸ்டோபர்
கஸ்தூரி எலியாஸ்
சுந்தரி ஸ்டீபன்
ரூத் ஜெயராணி அன்புராஜ்
சந்திரா தாமஸ்
ரெஜினா சாலமோன்
ஜேன் தர்மராஜ்
பாக்கியவதி சாமுவேல்
ஜெயகுமார் காலேப்
வில்லியம் பிரெடெரிக்
லில்லி பொன்னுத்தாய்
கிளாடிஸ் ராஜையா
நூர்ஜி
ரோஸ்லின் ஜோசப் பீட்டர்
ரூத் கமலம்
ஜெயசிங்
ஜோதிமாலா மனுவேல்
பெட்ரிசியா
ஞானசுந்தரி நாகராஜன்
செல்வி பொன்னரசி
பாக்கியம்
பிரின்சஸ் சுரேந்திரநாத்
ஜெனிபர் சில்வியா
கிரேஸ் அகஸ்டின்
விஜயவல்லி ஜான்
புஷ்பவல்லி ரத்தினம்
ஜாஸ்மின் டெலிபியா

**தூத்துக்குடி**
கிருபாசனம் ரெமீஜியஸ்
அந்தோணியம்மாள்
ஸ்டான்லி ராஜாமணி
அன்னத்தாய் ஆல்பர்ட்
சாலமோன்
தேவகிருபை
ரூபவல்யா
ஷீபா கோயில்பிச்சை
லீலா டேவிட்சன்
ஹெலன் திலக்
ஜோதிமணி வில்சன்
சாந்தகுமாரி
ரெத்னாவதி முத்துராஜ்
மனோகரம் ஜான்சன்
ஆலீஸ் குணசீலி
ஆதிசிரோன்மணி ஞானதீபம்
அசோக்குமார் பிரின்ஸ்
சந்திரா
தியாகராஜன்
ஆனி இன்பநாயகம்
தேவமணி ஆபிரகாம்
ஜலஜா மணிராஜ்
சேசம்மாள் தேவசகாயம்
ஞானமணி ஹெப்சிபா
ரெத்னாம்பாள் ஈஸ்டர்ராஜ்
சக்குபாய்
ரேச்சல் தவமணி
குளோரி செல்வராஜ்
புஷ்பராணி ஜேம்ஸ்
பாக்கியராஜ்
எஸ்தர்
ஜாய்ஸ் ஜான்சன்

**சென்னை**
செலின்ராணி டேவிட்
சைமன் கலைச்சந்திரன்
ஹெப்சிபா தாமஸ்
ஜெயமேரி சந்திரசேகரன்
கனகா வேணுகோபால்
துரைராஜ்
ஹெப்சிபா ஜெயசீலன்
கரோலின் ராஜகுமாரி
டேவிட் ஜெயகுமார்
யூனிஸ் ரிச்சர்ட்
குணசேகர்
சாந்தி டென்னிசன்
ஜோன் தேவநாயகம்
அன்னாள் ஜான்
கிரேஸ் தங்கதுரை
மில்காள் சாம்
கரோலின் ராஜகுமாரி
ஜெயச்சந்திரன்

**செங்கல்பட்டு**
கருணாகரன் ஆனந்தி
ஜரீன் லீனா

**திருச்சி**
சூசன்னா
டிக்ஸி ஆல்பர்ட்
ராணி
சிசிலியா ஜெயபிரகாஷ்
லில்லியன் ஜோசப்
தேவகிருபை
டேவிட்
ஜெபகனி டேவிட்

**கோயம்புத்தூர்**
அருணோதயம் வில்லியம்

**தேனி**
பொன்ராணி அன்புநாதன்
சுசீலா ஜான்
எலிசபெத் பால்ராஜ்
மாலா வில்சன்
நேசமணி சாமுவேல்

**புதுக்கோட்டை**
சாந்தி வில்லியம்

**தஞ்சாவூர்**
ஜோசப்பின் செல்லத்தாய்
பிரமீளா செல்வம்
ரோஸலின் செல்வராணி
மல்லிகா ஞானபாய்
சாந்தி குணசேகரன்
குணசீலி ஸ்டீபன்
ராணி பாண்டியன்

**சிவகெங்கை**
அன்பு கமலம்
பாலின் மார்டின்
லலிதா பெவின்சன்

**ஈரோடு**
சரோஜினி துரைராஜ்
ஜெயகுமாரி
ரூத் நேசமணி
பென்னி

**பெங்களூரு**
சூர்யா ரிச்சர்ட்சன்
லதா கிரேஸ்

**நீலகிரி**
மார்கிரெட் சுசீலா
பத்மாவதி அர்னால்டு
ஜெரில்டா
சோபியா நரேந்திரன்
நிர்மலா ராஜன்
ஜான்சி

**சேலம்**
இவாஞ்சலின் ஜோன்ஸ்
ரோலண்ட் அருள்ராஜ்
பழனியம்மாள்
சாமிநாதன்

**இராமநாதபுரம்**
ஸ்டெல்லா வசந்தகுமாரி

**பாண்டிச்சேரி**
பியூலா ஜெசுராஜன்

**திருப்பூர்**
கனகசத்தியவதி

**திண்டுக்கல்**
கெத்ஸி எலிசபெத்
அனிதா மெர்லின்
அகஸ்டி ராபர்ட்

**விருதுநகர்**
லீலாவதி பால்சிங்
பிளாரன்ஸ் ராஜமோகன்
பொன்னுத்தாய்

**வேலூர்**
மெர்ஸி புளோரா

**கள்ளக்குறிச்சி**
வசந்தா செல்வராஜ்

# வேத வினாக்கள்

**ஜூலை - 2025**

**( யோவான்: 8 முதல் 14 அதிகாரங்கள் வரை)**

**பொருத்துக**

1. துணிக்கை – தேவாலயப் பிரதிஷ்டை
2. வனாந்தரம் – விடுதலை
3. மாரிக்காலம் – சேறு
4. சத்தியம் – சாத்தான்
5. கண்கள் – எப்பிராயீம்

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. இயேசு 'நானே ..... ..... ..... என்னாலேயல்லாமல் ஒருவனும் ..... வரான்'
2. ..... தேவாலயத்தில் ..... மண்டபத்திலே ..... கொண்டிருந்தார்.
3. ஒருவன் என் ..... கைக்கொண்டால் அவன் என்றென்றைக்கும் ..... காண்பதில்லை.
4. ஒருவன் ..... அவருக்குச் ..... செய்தால் அவனுக்குச் .....
5. நானே ..... ..... என்னை விசுவாசிக்கிறவன் ..... பிழைப்பான்.

**விடை எழுதுக**

1. அவருடைய கட்டளை எப்படிப் பட்டதாயிருக்கிறது?
2. 'இவனைக் கட்டவிழ்த்து விடுங்கள்' இயேசு யாரைக் குறித்து சொன்னார் ?
3. 'அவரோடே கூட மரிக்கும்படி நாமும் போவோம்' என்றவன் யார்?
4. ஆட்டுத் தொழுவத்தில் வேறு வழியாய் ஏறுகிறவன் எப்படியிருக்கிறான்?
5. 'உன்னுடைய சாட்சி உண்மையானதல்ல' யார் யாரிடம் கூறியது?

**தொகுப்பு:** Mrs. **மெர்ஸி கிறிஸ்டோபர்,** *சென்னை.*

- விடைகளுடன், வேத ஆதாரங்களையும் எழுதுங்கள்.
- விடைகளை அஞ்சல் அட்டையில் எழுதக்கூடாது.
- வினா எண்ணைக் குறிப்பிட்டு, பதில்களை மட்டும் எழுதுங்கள்.
- வளரும் விண்ணரசு இதழின் சந்தா எண் மற்றும் அலைபேசி எண்ணுடன், உங்கள் **முழு முகவரியையும்** எழுதுங்கள்.
- சரியான விடை எழுதியவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**வேதவினா–விடை, வளரும் விண்ணரசு,**
**58/1, முத்தாலம்மன் கோவில் தெரு,**
**சேலையூர், சென்னை – 600 073.**
**9003916480**

**உங்களது விடைகள் எங்களுக்கு வந்துசேர கடைசி நாள் இம்மாதம் 20ஆம் தேதி**

**ஜூன் மாத வேதவினா–விடை போட்டியில் பரிசு பெற்றவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறோம்!**

1. **திருமதி. பொன்ராணி அன்புநாதன் – தேனி**
2. **திரு. சந்திர போஸ் – திருநெல்வேலி**
3. **திருமதி. குளோரி செல்வராஜ் – தூத்துக்குடி**

# நடப்புச் செய்திகள்

**சென்னை**: 'இந்தியாவில் மின்னணு சாதனங்களின் உற்பத்தி மையமாக தமிழகம் திகழ்கிறது' என்று மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறினார். தமிழ் மொழிக்காக பிரத்யேகமாக செயற்கை நுண்ணறிவு பணிகளை உருவாக்க 'தமிழ் ஏஐ' எனும் திட்டம் தொடங்கப்பட உள்ளது. இதற்காக, சென்னை ஐஐடி ஆராய்ச்சி பூங்கா மற்றும் டெபோ டெக் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் இணைந்து ஆராய்ச்சி மேற்கொள்ள உள்ளது. அதன்படி தமிழ் செயற்கை நுண்ணறிவு (தமிழ் ஏஐ) திட்டத்தின் தொடக்க விழா சென்னை ஐஐடி ஆராய்ச்சி பூங்கா வளாகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மத்திய இரயில்வே மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் காணொலி காட்சி வாயிலாக பங்கேற்று பேசியதாவது: இந்திய மொழிகள், குறிப்பாக தமிழ் மொழி ஏஐ துறையில் ஒருங்கிணைக்கப்படுவதில் இத்திட்டம் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும். இந்த திட்டத்தில் பொதுவாக பயன்படுத்தக்கூடிய கணினி வசதிகள் மற்றும் பல்வேறு சமூகங்களுக்கான செயற்கை நுண்ணறிவு மாதிரிகள் உருவாக்கப்படுகின்றன. இதன்மூலம் இந்தியாவின் பல்வகை சமூகங்களும், மொழிகளும் ஏஐ தொழில்நுட்பத்துடன் இணைக்கப்பட முடியும். உலகின் பழமையான மொழிகளில் ஒன்றான தமிழ், ஏஐ தொழில்நுட்பத்துடன் இணைவது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாகும். தமிழ் ஏஐ 11 மாதங்களில் செயலியாக வரும். அடுத்தாண்டு சாட்ஜிபிடி போன்று அனைத்து தகவல்களையும் வழங்கும் முகமையாக செயல்படுத்தப்படும். இந்த ஏஐ தொழில்நுட்பத்தை இரயில்வே துறையிலும் பயன்படுத்தலாம். இதுதவிர, தமிழகம் மின்னணு உற்பத்தியின் மையமாக செயல்படுகிறது. தற்போது மின்னணு உற்பத்தி, செல்போன், லேப்டாப் போன்ற மின்னணு சாதனங்கள் உற்பத்தியில் முன்னிலை வகிக்கிறது. தமிழகத்தில் புதிய மின்னணு உற்பத்தி மையம் அமைக்க சமீபத்தில் ஒப்புதல் தரப்பட்டுள்ளது. விரைவில் அதன் கட்டுமானப் பணிகள் தொடங்கும். இந்த முயற்சிகள் தமிழகத்தை தொழில்நுட்ப வளர்ச்சியில் முதன்மைக்குக் கொண்டு செல்லும். அதேபோல், எலெக்ட்ரானிக் துறையின் தலைமையகமாக தமிழகத்தை உருவாக்க வேண்டுமென பிரதமர் மோடி பலமுறை கூறியுள்ளார். அது தற்போது நிறைவேறி வருகிறது. ஏற்கெனவே வந்தே பாரத் ரயில் உற்பத்தி மையமாக தமிழகம் திகழ்கிறது. விரைவில் இரயில் வீல் உற்பத்தி தொழிற்சாலை சென்னை அருகே வரவுள்ளது. அப்போது இரயில்வே துறையில் தமிழகம் முதன்மையாக இருக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

**புதுடெல்லி**: இந்திய ராணுவத்துக்கு ரூ.30,000 கோடி மதிப்பில் அதிவிரைவு வான்பாதுகாப்பு ஏவுகணைகளை (க்யூஆர் - எஸ்ஏஎம்) வாங்க பாதுகாப்புத்துறை அமைச்சகம் விரைவில் ஒப்புதல் அளிக்கவுள்ளது. ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்கு பாகிஸ்தான் பதில் தாக்குதலில் இறங்கியபோது தரைவழி தாக்குதலைவிட வான் வழி தாக்குதல்தான் அதிகமாக இருந்தது. இந்தியா மீது தாக்குதல் நடத்த பாகிஸ்தான் அனுப்பிய ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் எல்லாம் நடுவானில் சுட்டு வீழ்த்தப்பட்டன. இவற்றில் பெரும்பாலனவை துருக்கி மற்றும் சீன ட்ரோன்கள். இவற்றை உள்நாட்டு ஆகாஷ் ஏவுகணைகள் சுட்டு வீழ்த்தின. இதனால் இந்திய இராணுவத்தில் தரையிலிருந்து வான் இலக்குகளை தகர்க்கும் படைப்பிரிவுகளை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக, ரூ.30,000 கோடி மதிப்பில் க்யூஆர்-எஸ்ஏஎம் என்ற அதிவிரைவு வான் பாதுகாப்பு ஏவுகணை யூனிட்களை வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஏவுகணைகள் எதிரி நாட்டின் போர் விமானங்கள், ஹெலிகாப்டர்கள் மற்றும் ட்ரோன்களை 25 கி.மீ முதல் 30. கி.மீ தூரத்தில் சுட்டு வீழ்த்தும். இந்த ஏவுகணைகளை பாரத் எலக்ட்ரானிக்ஸ் மற்றும் பாரத் டைனமிக்ஸ் என்ற பொதுத்துறை நிறுவனங்கள் தயாரிக்கின்றன. இந்த ஏவுகணைகளை டிஆர்டிஓ ஏற்கெனவே வெற்றிகரமாக பரிசோதனை செய்துள்ளது. பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் பாதுகாப்பு கொள்முதல் கவுன்சில் கூட்டம் இந்த மாத இறுதியில் நடைபெறும். அப்போது க்யூஆர் - எஸ்ஏஎம் ஏவுகணைகள் கொள்முதலுக்கு ஒப்புதல் அளிக்கப்படும் எனத் தெரிகிறது. **எஸ்-400, ஆகாஷ் ஏவுகணைகள்:** இந்திய ராணுவம் மற்றும் விமானப்படையிடம் ஏற்கெனவே எஸ்-400, ஆகாஷ், பராக்-8, இக்லா மற்றும் எல்-70 என்ற வான் பாதுகாப்பு ஆயுதங்கள் உள்ளன. அவற்றுடன் க்யூஆர்- எஸ்ஏஎம் ஏவுகணை யூனிட்கள் இணையும்போது, நாட்டின் வான் பாதுகாப்பு மேலும் அதிகரிக்கும். ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் 6 கி.மீ தொலைவில் தாக்குதல் நடத்தும் குறுகிய தூர வான் பாதுகாப்பு ஏவுகணை, 350 கி.மீ சென்று தாக்கும் தொலை தூர ஏவுகணையை குஷா திட்டத்தின் கீழ் தயாரித்துக் கொண்டிருக்கிறது. இவற்றை 2028-29-ம் ஆண்டில் ராணுவத்தில் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

நன்றி: தி இந்து தமிழ் திசை (11/06/2025)

◀◀◀◀◀

# பழங்குடியின மக்களுக்கு ஆலயம் கட்ட...

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களுக்கு,

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகள்.

இந்தியாவின் மிகப்பெரிய பழங்குடியினமான கோண்டி மக்கள் வாழும் சத்தீஷ்கர் மாநிலத்தில் நமது அருட்பணி நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறது. எதிர்ப்புகள் நமது விசுவாசிகளின் விசுவாசத்தை அசைத்துப் பார்க்க முடியவில்லை என்பதற்கு உதாரணமாக, தற்போது, அங்கு மூன்று ஆலயக்கட்டுமானப்பணிகளை ஆரம்பித்துள்ளோம்.

கோண்டி மக்களின் வீடுகளைப் போன்ற தோற்றத்தில் ஆலயம் கட்டப்படுவதால், நமக்கு ஆலயம் கட்டுவதற்கான செலவும் குறைவு. ஆனாலும், ஒரு ஆலயம் கட்டுவதற்கு ரூபாய் 5 இலட்சம் செலவாகிறது.

வெளிநாட்டு அருட்பணியாளர்கள் நமது தமிழ்நாட்டிற்கு வந்து அருட்பணியாற்றியபோது, தூரதரிசனத்தோடு, மிக அழகிய ஆலயங்களை நமக்காக வடிவமைத்துக் கட்டினர். அதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.



தற்போது, நாம் பழங்குடியின மக்களுக்கு ஆலயம் கட்டிக் கொடுப்பதற்கு கடமை உள்ளவர்களாயிருக்கிறோம். ஆகவே. பழங்குடியின மக்களும் ஆண்டவரை விடுதலையோடு ஆராதிக்க, நீங்களும் ஒரு ஆலயத்தைக் கட்டிக் கொடுக்கலாமே. உங்கள் குடும்பத்திலுள்ளவர்களின் நினைவாக, அந்த ஆலயங்கள் இயேசுவின் வருகைவரை ஆத்துமாக்களை அறுவடை செய்யும் களங்களாக இருக்கும்.

மூன்று ஆலயங்கள் கட்டுவதற்காக நமக்கு 15 இலட்சம் தேவைப்படுகிறது. இந்தத் தேவைகளுக்காக ஜெபித்து, ஆதரவளிப்பவர்கள், கீழ்க்கண்ட வங்கிக்கணக்கிற்கோ, அல்லது **QR** கோடை வருடியோ அல்லது நமது தரிசனம் பரப்பும் ஊழியர்களிடமோ உங்கள் பங்கை கொடுத்து உதவுங்கள்.

தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

**நமது தேவை**
**ரூ.15.00**
**இலட்சம்**

கிறிஸ்துவின் பணியில்
அருள்திரு.அ. லெஸ்லி நாகராஜன்,
பொதுச்சேவகர்

**Account Name : INDIA CHURCH GROWTH MISSION**
**Account Number : 10143136773**
**Bank : State Bank of India**
**Branch Name : Selaiyur, Chennai- 600073**
**IFSC Code : SBIN0007948**

icgm1014@sbi

ICGM

**Registered with RNI Under No:TNTAM/2000/01585**

**Postal Registration No: TN/MA/42/2024-2026 WPP No: TN/WPP-20/SR/2024-2026**

Posted at BPC Madurai - 625 001.

Date of publishing: 28th June 2025 Date of posting - 28,29 & 30th June 2025.

Printed by Mr.S.Gunasekaran and Published by Mr.D. Thirugnanam on behalf of Irai Arasu Trust and printed at Sharon Print System, No:51/71, Ahimsapuram First Street, Near Saraswathi Theatre, Sellur, Madurai-625002 and Published at Nagamalai Pudur, Palkalai Nagar, Madurai-625021, Editor Mr.G. Ponnuraj.

**பொதுச்சேவகரிடமிருந்து... தொடர்ச்சி...**

தெரிவித்துக் கொள்கிறோம்.

ஜுன் மாதத்தில் திரு.கிறிஸ்டோபர், அவரது துணைவியார் மற்றும் நமது திண்டுக்கல் மாவட்ட தரிசனம் பரப்பும் அருட்பணியாளர் திரு. ஜோசப் ஆசீர்வாதம் ஆகியோர், நமது சத்தீஷ்கர் மாநிலப் பணித்தளங்களைப் பார்வையிட்டு வந்தனர். அவர்களுக்காகத் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

சத்தீஷ்கர் மாநிலத்தில் மூன்று ஆலயங்கள் விரைவாகக் கட்டப்பட்டு வருகின்றன. இதன் தேவைகள் சந்திக்கப்பட ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ஜுன் 23-25 வரை வடகிழக்கு மாநிலங்களிலிருந்து (அஸ்ஸாம், மணிப்பூர்) தரிசனம் பரப்புவோருக்கு அருட்பணியாற்ற ஒப்புக் கொடுத்தவர்களுக்கென பயிற்சிக்கூட்டம் சென்னையில் நடைபெற்றது. இவர்கள் மூலம் இன்னும் அநேகர் தரிசனம் பரப்பும் பணியைச் செய்வதற்கு முன்வரவும், இதன் மூலம் ஜெப மற்றும் பொருளாதார உதவிகள் கிடைக்கவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதித்து காத்து நடத்துவாராக.

கிறிஸ்துவின் சீடராக்கும் பணியில்,
**அருள்திரு.அ. லெஸ்லி நாகராஜன்,**
பொதுச்சேவகர்.

**If undelivered, please return to:**

**Valarum Vinnarasu, No.58/1. Muthalamman Koil Street,**
**Selaiyur, Chennai - 600 073. Tamilnadu.**
**Cell : 9442150482.**

icgm1014@sbi

**ICGM**